Registered as a news paper.

பக்கங்கள். பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 29 | ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 14 | (12.04.2006) | புதன்கிழமை | இதழ் 194

மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்!
உங்கள்
மு/ உடையார்கட்டு
நடத்தும்

புனிவெக் கணனிக் கல்லூரி

IT SKILL ADVANCE DEVELOPMENT

மாவட்ட ரீதியிலான தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு

15.04.2006 சனி

பிரிவு 1 - காலை 9மணிக்கு  பிரிவு 11 - மாலை 2 மணிக்கு
(4 மணிநேரம் வரையானது)

கருத்தரங்கு நிறைவில்
DATA COM IT சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரம்:-கருத்தரங்கு இடம்பெறும் இடம்.
புனிவெக் கணனிக் கல்லூரி
மு/உடையார்கட்டு.

பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள்!

(சி/4464)

# திருமலையில் கிளைமோர்!

## 12 கடற்படையினர் பலி



தாக்குதலுக்குள்ளான பஸ்

திருகோணமலை —

திருகோணமலை - தம்பலகாமத்தில் கடற்படையினரின் பஸ் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 12 கடற்படையினர் கொல்லப்பட்டனர். மேலும் 8 கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 1.55 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் - தாக்குதலுக்குள்ளான கடற்படை பஸ் மீது வேகமாக வந்த ஹையேஸ் வான் ஒன்று மோதியதில் அதில் பயணித்த இங்கிலாந்து நாட்டவர் இருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து (12 ஆம் பக்கம் பார்க்க)



காயமடைந்த கடற்படைச் சிப்பாய்

## நோர்வே அரசு கண்டனம்

ஒஸ்லோ —

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகள் தொடர்பாக நோர்வே அரசாங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

திருமலையில் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும், அதனையடுத்து இடம்பெற்றவன்முறைகளும் கடந்த டிசம்பர், ஜனவரி மாத சூழல்போன்று ஏற்படக் காரணமாகிவிடும் என்றும்நோர்வே கவலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் விக்னேஸ்வரனின் புகழுடல் தீயுடன் சங்கமம்!

திருகோணமலை —

திருகோணமலை தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் மாமனிதர் வ. விக்னேஸ்வரனின் புகழுடல் ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் சிந்த தீயுடன் சங்கமமானது.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் திருமலை நகரசபை மண்டபத்துக்கு கொண்டுவரப்பட்ட புகழுடல் அடங்கிய பேழை, நண்பகல் 12.30 மணிவரை பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி இரங்கல் கூட்டமும் நடைபெற்றது.

சிரேஷ்ட சட்டத்தரணியும், தமிழ் மக்கள் பேரவையின் ஆலோசகருமான க.ஜெகசோதி தலைமையில் பகல் 11:45 (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு விசாரணை!

கொழும்பு —

திருகோணமலை - தம்பலகாமம் பகுதியில் கடற்படையினர் பயணம் செய்த பஸ் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் குறித்து தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ப்ஸ் டோட்ரயர் தெரிவித்தார்.

திருகோணமலை - தம்பலகாமம் பகுதியில் நேற்று இடம்பெற்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரவிராஜ் எம்.பி மீது அபயபுரவில் காடையர் தாக்குதல்

திருகோணமலை —

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், திருகோண

## பேச்சை ஒத்திவைக்க புலிகள் கோரவில்லை!

## கண்காணிப்புக்குழு புதிய தலைவர் யாழ்.வருகை!

யாழ்ப்பாணம் —

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன்

திருகோணமலை —

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், திருகோண மலை-அபயபுர பகுதியில் வைத்து சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டார். இவரது வாக னமும் அடித்து நொருக்கப்பட்டது.

மாமனிதர் வ.விக்னேஸ்வரனின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டுவிட்டு கொழும்பு திரும்பிக் கொண்டிருந்த போது நேற்று மாலை 5.45 மணியளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் கோரவில்லை!

## ஊடகச் செய்திகளுக்கு தயா மாஸ்டர் மறுப்பு

கொழும்பு —

எதிர்வரும் 19 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம் பமாகவுள்ள இரண்டாம் கட்..ப் பேச்சுக்களை ஒத்திவைக்குமாறு விடுதலைப் புலிகள் கோரியி ருப்பதாக வெளியான செய்தியை விடுதலைப் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் மறுத்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் - இது உண்மைக்குப் புறம்பான செய்தி எனக் குறிப்பிட்டார்.

அதேவேளை - ஜெனிவாவில் நடைபெற வுள்ள இரண்டாம் சுற்றுப் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து இராணுவ அதிகாரிகள் மற்றும் கடற்படை அதி காரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தினார் என் றும் இந்தச் சந்திப்பின்போது குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராயப் பட்டதாகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, (12 ஆம் பக்கம் பார்க்க)

# போக்குவரத்தில் ஈடுபட முயன்றால் புலிகளின் படகுகள் அழிக்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சுக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகள் - போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் தமது படகுகளில் பயணம் செய்ய முயன்றால், அவர்கள் மீது தாக்குதல் நடத்தப் படும் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்புப் படைகளின் தளபதிகளுடன் நேற்றுக்காலை 11 மணியளவில் நடைபெற்ற சந்திப்பை அடுத்தே அரசாங்கத்தின் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

ஜெனிவா பேச்சுக்கு முன்னர் தமது தளபதி கள் மத்தியகுழுக் கூட்டத்தில் பங்கேற்க வன்னி வருவதற்கு ஹெலி வசதி வழங்கு மாறு புலிகள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்ததை அடுத்து கடல்வழியாக தமது தளபதிகள் பயணம் செய்வதற்கு ஒழுங்குகளைச் செய்து தரும்படி புலிகள் கோரியிருந்தனர்.

ஆனால், கடற்படையினரின் படகிலேயே புலிகளின் தளபதி கள் பயணம் செய்ய முடியு மென அரசாங்கம் நிபந்தனை விதித்தது. இதையடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு புலிகள் அனுப்பியிருந்த கடிதத்தில் -

, தமது படகுகளில் பயணம் செய்ய ஒழுங்குகள் செய்யப்படா விடின் சொந்தப் பாது காப்புடன் புலிகள் பயணத்தைத் தொடர நேரிடு மென எச்சரித்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# கியூமெடிக்கா நிறுவனத்தால் அம்புலன்ஸ் படகு கையளிப்பு!

நெடுந்தீவு ——

கியூமெடிக்கா நிறுவனத்தால் நெடுந்தீவு மக்களின் அவசர நோயாளர் சேவைக்கென வழங்கப்பட்ட அம்புலன்ஸ் படகு கையளிப்பு நிகழ்வு நேற்றுக்காலை 8 மணியளவில் இடம்பெற்றது. நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் வைத்து இந்தப் படகு கையளிக்கப்பட்டது.

அம்புலன்ஸ் படகிலிருந்து பயணிகள் ஏற்றியிறக்கும் பகுதியை யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து துறைமுக பயணிகள் மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மங்கள விளக்கை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், கியூமெடிக்கா நிறுவன இலங்கை இணைப்பாளர் சாம் இராஜசூரியர், யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், நெடுந்தீவு உதவி அரச அதிபர் ம.பற்றிக் டிறஞ்சன், மற்றும் பிரமுகர்களும் ஏற்றிவைத்தனர்.

இதேவேளை - இந்த அம்புலன்ஸ் படகு கியூமெடிக்கா நிறுவனத்தின் மேற்பார்வையில் நெடுந்தீவு பிரதேச ஏ.ஏ.ஜி நிறுவனத்தின் பொறுப்பில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது. (113)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், சத்தியராஜ், ரஞ்சிதா
மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
கா.நே:(பு.நே) 11.00, 2.45, 6.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
இன்று முதல்
எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த
கள்வனின் காதலி
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

மெர்குரிப்பூக்கள்
பு.நேரம்:10.30,2.30,6.30,9.00

மனோகரா யாழ்ப்பாணம்
மாதவன், பூஜா, வடிவேல், மணிவண்ணன் நடித்த
தம்பி
14 முதல் -
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின
அதிரடி வெளியீடு
திருப்பதி
அஜித்குமார், சதா
மற்றும் பலர் நடித்த
புத்தாண்டு தினத்தை
முன்னிட்டு - காலை 7.30
இரவு 12.00 விசேட காட்சிகள்

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
கா.நே 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

DAIDO Mopet

48CC
Koyo
ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

E.mail: zme@slt.lk

புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு
அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் (12.04.2006) இன்று09.00 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள
உத்தர நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபவேளையில்,
எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

கிருஷ்ணா நகை மாளிகை
என்னும் புதுக்கடையை ஆரம்பிக்கவுள்ளதால், அத்தருணம் தாங்களும்
கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
உரிமையாளர், ஏ.எஸ்.சுரேந்திரன் குடும்பத்தினர்.
தொலைபேசி இல : 021 - 222 5046


## கியூடெக் –கரித்தாஸ் நிறுவனம்

# கண்ணீர் அஞ்சலி



08 12 1951

கந்தபத்மநாபன் சண்முகரட்ணம்
(சிறுவர் திட்டமுகாமையாளர்)



28 12 1977

செல்வேந்திரா பிரதீப்குமார்
(சமூகபங்கு செயற்பாட்டு அலுவலர்)

**அகாலமரணம் 10-04-2006**

நம்ப முடியவில்லை
நம்ப மறுக்கிறதே – ஐயகோ
நேற்றுவரை எம்மோடு கியூடெக்-கரித்தாஸ்
பணிவாழ்வில் பங்காளராய்
நற்பணிகள் துடிப்புடனே
தேடிச்சென்று செய்தபணிகள்
மனக்கண்ணில் சுமையாக

சுமைகள் தாங்கா துடிதுடிக்கும்
உறவுகளும் உங்கள்
தூயபணியை நினைந்துருக
நாட்டின் அவலங்கள்
நம்மவர் நிலை வாழ்வு
நடுத்தெருவில் கலைந்ததுவோ

உறவுகள் துயரோடு
நாமும் ஒன்றாய் இணைந்து
இதயக்கனத்துடனே
இறைவனை இறைஞ்சுகின்றோம்
நின் ஆத்மா சாந்திபெற
சாந்தி சாந்தி சாந்தி

## CARITAS - HUDEC Mourns

We would like to express our sympathy and our sincere condolences to Predip's family. For us, as Caritas Hudec staff, his smile will remain in our mind as what used to light up every of our mornings. He had the talent to bring positive energy to the rest of the team and was passionate to work with the communities.

We would like to express our sympathy and our sincere condolences to Paath's family. For us, as Caritas Hudec staff, he will remain some one fully dedicated and enthusiastic to work with the children. We will miss his good humour and his effervescent personality.

DIRECTOR, STAFF HUDEC-CARITAS -JAFFNA

இயக்குனர், சகபணியாளர்கள - கியூடெக்-கரித்தாஸ் யாழ்ப்பாணம்

# தமிழீழ அரசாங்கத்தை அமைக்கும் புலிகளின் செயலை தடுக்கவேண்டும்

## என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு—

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஜெனிவாவில் இடம்பெறவுள்ள இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் தமிழீழ அரசு அமைப்பதை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படாவிடின், சமாதான முயற்சிக்கு தம்மால் ஆதரவு வழங்க முடியாதென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.


நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டிலேயே ஜே.வி.பி இவ்வாறு தெரிவித்தது. அங்கு ஜே.வி.பி மேலும் தெரிவித்துள்ளதாவது -

நாட்டின் இறைமை மற்றும் தேசிய பாதுகாப்புக்கு தீங்கு நிகழாவண்ணம் நடைபெறவுள்ள பேச்சில் அரசாங்கம் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கமைய தமிழீழ அரசை அங்கீகரிக்கும் உலகின் முதலாவது நாடு நோர்வேயாக இருக்கலாமென நாம் நினைக்கிறோம்.

இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சில் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய இவ்வாறான நிகழ்வை முழுமையாகத் தடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

எதிர்காலத்தில் தமிழீழ அரசை அமைப்பதற்கான முயற்சியை தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாதுவிடின், அரசுக்கும், புலிகளுக்குமிடையே நடைபெறும் பேச்சுக்களுக்கு எம்மால் ஆதரவு வழங்க முடியாதென்பதையும் தெரிவிக்கின்றோமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது. (தே)

# மே 20 ஆம் திகதிக்கு தேர்தல் ஒத்திவைப்பு!



கொழும்பு

கொழும்பு மாநகரசபை உட்பட 22 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மே மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மே மாதம் 18 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், வெசாக் பண்டிகை காலத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவது பண்டிகைக் கொண்டாட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என பல்வேறு தரப்பினர் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்ததையடுத்து - இந்த திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலுக்கான திகதி மாற்றம் தொடர்பாக சகல தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஓய்வூதியக் கொடுப்பனவு செலவு இந்தவருடம் அதிகரிக்குமாம்!

## பணிப்பாளர் தகவல்

கொழும்பு—

அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான செலவு இந்த வருடம் அதிகரிக்குமென ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் கே.ஏ.திலகரட்ண தெரிவித்தார்.

இந்தவருட முடிவில் ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான செலவு மூன்று பில்லியனாக அதிகரிக்கும்.

கடந்த வருடம் இதன் மொத்தச் செலவு 2.2 பில்லியன் ரூபாவாக இருந்தது.

இந்த ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான செலவு அதிகரிப்பதற்கு அரச சேவையிலுள்ளவர்கள் தாமாக விலகிக்கொள்ளலாமென்ற திட்டம், அரச ஊழியருக்கான சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதிய முரண்பாடுகளைத் தீர்ப்பதால் ஏற்படும் கொடுப்பனவு அதிகரிப்பு ஆகிய காரணங்களாலேயே இந்தச் செலவு அதிகரிக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் தற்போதுள்ள 20 மில்லியன் சனத்தொகையில் 60 வயதை உடையவர்கள் 10 வீதமாகஉள்ளதாகவும், இன்னும் 20 வருடங்களில் இந்தத் தொகை 23 வீதமாக அதிகரிக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மகிந்த விஜேசேகர மீது ஐ.தே.க. ஒழுக்க விசாரணை!



கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜேசேகர கட்சியின் செயற்குழு உறுப்பினர் மற்றும் மாவட்டத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையால் - கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்காக அவருக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ள கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தலைமையில் சிறிகோத்தாவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய சட்ட ஒழுங்குகளுக்கு முரணாகச் செயற்பட்டு கட்சித் தலைமையை கடுமையாக விமர்சித்தமையால் மகிந்த விஜேசேகரவை மாத்தறை மாவட்டத் தலைவர் பதவியிலிருந்தும், கட்சி செயற்குழுவிலிருந்தும் நீக்குவதற்கு கடந்த வாரம் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார்.

ரணிலின் இந்தத் தீர்மானம் சரியானதென்பது கட்சி செயற்குழுவைச் சேர்ந்த அநேகரின் கருத்தாகவுள்ள போதும், அவருக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தி, இனிமேல் அவ்வாறு நடைபெறாதென அவரிடமிருந்து உறுதிமொழி பெறப்பட்ட பின்னர், மீண்டும் மாவட்டத் தலைமைப் பொறுப்பையும், செயற்குழு உறுப்பினர் பதவியையும் வழங்குவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படவுள்ளது.

கூட்டம் அமைதியான முறையில் ஆரம்பமாகிய போதும், கூட்டத்தின் நடுவில் மகிந்த விஜேசேகரவின் பதவிபறிப்புக்கு எதிராகவும், சார்பாகவும் கருத்துக்கள் வெளிப்பட ஆரம்பித்ததையடுத்து கூட்டம் சூடுபிடித்தது குறிப்பிடத்தக்கது.

# செயற்குழுவின் தீர்மானத்துக்கமைய ஒற்றுமையாக செயற்பட வேண்டும்

## அரசியல் சபை உறுப்பினர்களிடம் ரணில் தெரிவிப்பு

கொழும்பு—

ஐ.தே.கட்சியின் செயற்குழுவின் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டுக் கட்சியின் அரசியல் சபையைச் சேர்ந்த அனைவரும் ஒற்றுமையாக செயற்படவேண்டுமெனவும், அவ்வாறு ஒற்றுமையாக செயற்படாவிடின் அரசியல் சபையை மறுசீரமைக்க வேண்டியேற்படுமெனவும் ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் சபைக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்தில் நடைபெற்ற போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

அரசியல் சபையின் புதிய அங்கத்தவர்களாக நியமனம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான ருக்மன் சேனநாயக்க, சஜித் பிரேமதாச, காமினி லொக்குகே, ரவி கருணாநாயக்க, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வஜிர அபேவர்த்தன மிலிந்த மொறகொட, ஹேமகுமார நாணயக்கார ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய, பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, மலிக் சமரவிக்கிரம, நாடாளுமன்ற உறுப்பினர்களான காமினி ஜயவிக்கிரம பெரேரா. பி.தயாரத்ன, லக்ஷ்மன் செனவிரத்ன, எஸ்.பி.திஸநாயக்க, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கபீர் ஹாசீம் ஆகியோரும் அரசியல் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டொக்டர் ராஜித சேனாரத்ன இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றுமையைக் காப்பதற்கு பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தலைமையில் ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது.

# விக்னேஸ்வரன் படுகொலை சந்தேக நபரொருவர் கைது!

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு—

கடந்த 7 ஆம் திகதி சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரனின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவரைக் கைதுசெய்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

படுகொலைச் சம்பவத்தை நேரடியாகக் கண்டவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்றபோது வங்கிக்கு வந்த பெண்ணொருவரின் ஓட்டோ சாரதி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவரை நன்கு அவதானித்திருந்ததாகவும், அந்த ஓட்டோச் சாரதியின் உதவியுடன் சந்தேக நபரின் படம் வரையப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சாதாரணதர பரீட்சை முடிவு மேமாதமே வெளியிடப்படும்!

கொழும்பு—

க.பொ.த. சாதாரணதர பரீட்சை முடிவுகளை இந்த மாதம் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் - சிங்கள புதுவருடத்துக்கு முன்னர் பெறுபேற்றை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டபோதிலும் பல்வேறு காரணங்களால் பெறுபேற்றை வெளியிடுவதை மே மாதம் முதல் வாரம்வரை ஒத்திவைக்க நேர்ந்துள்ளதாக பரீட்சைத் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிட்டு புள்ளிகள் இடுவதற்கு முன்னர் ஓ.எம்.ஆர். கான் இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. அந்தமுறை தற்போது நிறுத்தப்பட்டிருப்பதால் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்கு 5 லட்சத்து 26 ஆயிரத்து 22 பேர் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

# அரசின் புதிய சம்பள சுற்றறிக்கை 25 ஆம் திகதிக்கு முன் வெளியீடு!

கொழும்பு—

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் புதிய சம்பள சுற்றறிக்கை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தவருட வரவு - செலவுத்திட்ட ஆலோசனைகளுக்கு அமைய அரச சேவையாளர்களின் சம்பளம் திருத்தப்பட்டு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையை வெளியிடுமாறு ஜனாதிபதி - தேசிய சம்பள ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் புதிய சம்பள சுற்றறிக்கை தொடர்பாகவும் ஏதாவது சிக்கல்கள் தோன்றுமானால், அது தொடர்பாக தேசிய சம்பள ஆணைக்குழு ஆராயுமெனவும் தெரிவித்த அவர் - புதிய சம்பள சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் அது குறித்த ஆலோசனைகளை, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் உள்ள தேசிய சம்பள ஆணைக்குழு அலுவலகத்துக்கு கடிதமூலமோ அல்லது 0112669134 என்ற தொலைபேசி வாயிலாகவோ அறிவிக்கலாமெனவும் அவர் குறிப்பிட்டார். (தே)

# கஞ்சா வர்த்தகத்தில் ஈடுபட்ட இராணுவ கோப்ரல் கைது!

கொழும்பு—

இராணுவத்துக்கு சொந்தமானதெனக் கூறப்படும் வாகனமொன்றில் 18 கிலோ கஞ்சாவை கொண்டு செல்கையில் இராணுவ கோப்ரல் ஒருவரும், மற்றொருவரும் கடந்த 9 ஆம் திகதி மாலை கிரியெல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இராணுவ சீருடை அணிந்த ஒருவர் வீதித்தடையை மீறி செல்வதாக கிரியெல்ல பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து, கிரியெல்ல பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் தடை ஒன்றை ஏற்படுத்தி குறித்த வாகனத்தை தடை செய்துள்ளனர்.

பின்னர் இராணுவ கோப்ரலிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது, நண்பர் ஒருவரின் வீட்டுக்கு சென்ற பின்னர் கொழும்புக்கு திரும்பிக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

ஆனால் இவரது வாக்குமூலத்தில் திருப்தியடையாத பொலிஸார் வாகனத்தை சோதனையிட்டபோது, ஒவ்வொரு கிலோவாக பொதி செய்யப்பட்டிருந்த 18 கிலோ கஞ்சாவை மீட்டனர்.

தனமலவ பிரதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த கஞ்சா கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவதாக பின்னர் அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

நீண்டகாலமாக இவர் இந்த கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (தே)

# வற் வரி மோசடியைத் தடுக்க கடும் சட்ட நடவடிக்கை!

கொழும்பு—

வருமானவரித் திணைக்களத்தில் நடந்துள்ளதாகக் கூறப்படும் வற் வரி மோசடி குறித்து விசேட விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ஆலோசனை வழங்கியுள்ளதாகவும், இரகசியப் பொலிஸார் மூலம் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் - பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

வருமான வரித் திணைக்களத்தில் மீண்டும் அவ்வாறானதொரு மோசடி இடம்பெறாத வகையில் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இலங்கையின் வருமானத்தில் 56 வீதப் பங்களிப்பை வழங்கிவரும் வருமானவரித் திணைக்களத்தின் சில அதிகாரிகளின் செயற்பாடுகளால் அரச திணைக்களங்களுக்கு ஏற்படும் அபகீர்த்தியைப் போக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# நமது ஈழநாடு நடத்திய உயர்தர மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கிலிருந்து சில காட்சிகள்












# முதல் இனிங்ஸின் முடிவில் பங்களாதேஷ் முன்னிலை




பதுல்லா —

அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே கடந்த சனிக்கிழமை பதுல்லாவில் ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி தனது முதலாவது இனிங்ஸில் 269 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து, பங்களாதேஷ் அணியைவிட 158 ஓட்டங்களால் பின்தங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் அவுஸ்ரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

கில்கிறிஸ்ட் 7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 51 ஓட்டங்களுடனும், லீ 13 ஓட்டங்களுடனும் நேற்றைய ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இதில் லீ மேலதிகமாக இரு ஓட்டங்களை மட்டும் பெற்று 15 ஓட்டங்களுடன் மொட்ராசா வீசிய பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜிலெஸ்பி, கில்கிறிஸ்ட்டுடன் இணைந்தார். அவரின் உதவியுடன் கில்கிறிஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். இந்தநிலையில் 26 ஓட்டங்களைப் பெற்ற ஜிலெஸ்பி, மொகமட் ரபீக்கின் பந்தில் போல்டானார்.

தொடர்ந்து வந்த ஸ்ருவர்ட் கிளார்க் ஓட்டமெதையும் பெறாமல் மொகமட் ரபீக்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இறுதியாக மக்கில் களமிறங்கினார். அந்தவேளை, சிறப்பாக ஆடி 14 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்க

விளையாட்டு

லாக 144 ஓட்டங்களைப் பெற்றிருந்த கில்கிறிஸ்ட், மொகமட் ரபீக் வீசிய பந்தை ஹுசைனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனால் அவுஸ்ரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. மக்கில் ஓட்டமெதையும் பெறாமல் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ரபீக் 5, மொட்ராசா, இனாமுல்-ஹக் இருவரும் தலா 2, ஹுசைன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து பங்களாதேஷ் அணி தனது இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கியது. அந்த அணியின் ஜாவிட் ஓமர் மற்றும் நபீஸ் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

இதில் நபீஸ் 7 பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களைப் பெற்று லீயின் பந்தில் போல்டானார்.

அடுத்து ஹபிபுல் பசார் களமிறங்க, 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஓமர், ஜிலெஸ்பி வீசிய பந்தை கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ரஜின் சாலே களம்புக, 7 ஓட்டங்களைப் பெற்ற பசார் ரன் அவுட்டானார்.

தொடர்ந்து களமிறங்கிய அஸ்ரபுல் 4 ஓட்டங்களை மட்டும் பெற்று - ஸ்ருவர்ட் கிளார்க்கின் பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் அப்ரப் அகமட், ரஜின் சாலேயுடன் இணைந்தார். அவர் 17 ஓட்டங்களைப் பெற்று மக்கில் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து காலித் மசூத் களமிறங்கினார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் சாலே 29 ஓட்டங்களுடனும், மசூத் ஓட்டமெதையும் பெறாமலும் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் லீ, ஜிலெஸ்பி, மக்கில், ஸ்ருவர்ட் கிளார்க் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# முதலிடம் பெற்ற அவுஸ்ரேலியாவுக்கு ஐ.சி.சி 5 கோடி ரூபா பணப்பரிசு



டுபாய் —

கடந்த ஒரு வருடமாக டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுவரும் அவுஸ்ரேலிய அணிக்கு ரூபா 5 கோடி பரிசு வழங்கி கௌரவித்துள்ளது சர்வதேச கிரிக்கெட் சபை.

பங்களாதேஷில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவுஸ்ரேலிய அணியின் கப்டன் றிக்கி பொண்டிங்கிடம் ஐ.சி.சி இயக்குனர் மொகமட் அலி அஸ்கார் அந்த பரிசை வழங்கினார்.

ஏப்ரல் முதலாம் திகதி வரை விளையாடப்படும் போட்டிகள் தரவரிசைக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

அதன்படி டெஸ்ட் போட்டிகளில் 9 வெற்றி, 3 சமனிலை, 2 தோல்விகளுடன் 18 புள்ளிகளைச் சேர்த்து முதலிடத்தைப் பிடித்துள்ளது அவுஸ்ரேலியா. அதற்கு கடுமையான போட்டி அளித்துவரும் இங்கிலாந்து குறுகிய வித்தியாசத்தில் 2ஆம் இடத்தைப் பிடித்தது.

ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை, தென்னாபிரிக்காவை விடவும் 13 புள்ளிகள் முன்னிலை பெற்று, முதலிடத்தைப் பிடித்துள்ளது அவுஸ்ரேலியா. 20 வெற்றி, ஒரு சமனிலை, 10 தோல்விகளைப் பெற்றுள்ளது அந்த அணி.

தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக முதலிடச் சிறப்பைப் பெற்றுள்ள அவுஸ்ரேலிய அணிக்கு, ஐ.சி.சி முதன்மைச் செயல் அதிகாரி மல்கம் ஸ்பீட் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# 100 விக்கெட்டுக்களை கடக்கும் இர்பான் பதான்

புதுடெல்கி —

இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான பதான், இன்று இங்கிலாந்துக்கு எதிராக நடைபெறவுள்ள ஆட்டத்தில் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினால், ஒருநாள் கிரிக்கெட்டில் 100 விக்கெட்டுக்களைக் கடப்பார்.

2004ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிராக களமிறங்கிய அவர், இதுவரை 56 போட்டிகளில் விளையாடி 97 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

அதேபோல் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தும் பட்சத்தில் - ஹர்பஜன் சிங் 150 விக்கெட்டுக்களை வீழ்த்தியர் என்ற பெருமையை அடைவார்.



துடுப்பாட்டத்தில் யுவராஜ்சிங் 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடக்கவுள்ளார்.

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை




- இலக்கம் 1-5 வரையுள்ள வினாக்களில் ஒரு செயலைப் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. அந்த செயலைச் சம்பூர்ணமாக்குவதற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து புள்ளிக் கோட்டை நிரப்புக.

1) பாடசாலைக்குள் செல்லும் பிரதான கேற்றுக்கு..............................
(1) மேல் (2) கீழ் (3) அருகில்

2) அமர்ந்திருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்க்கு..........................
(1) கட்டிலிலே (2) கதிரையிலே (3) சுவரிலே

3) இருக்கும்போதே நித்திரையானார். அவருடைய ........................
(1) வேலையை (2) உணவை (3) கதையை

4) மேற்பார்வை செய்ய வந்த அதிபர் அவரைப் பார்த்து........................
(1) கையை (2) காலை (3) தலையை

5) ஆட்டிக் கொண்டு சற்றுத் தொலைவுக்குச் சென்று..............................
(1) கொஞ்ச நேரம் (2) சில மணித்தியாலங்கள்
(3) முழு நாளும் யோசனை செய்து கொண்டு நின்றார்.

- இல 6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையை எழுதுக.

6) ஏறுவரிசைப்படுத்துக 306,603,437,743,347..........................

7) பெரிய எண்ணைக் கட்டமிடுக. 835,538,948,498,358

8) 29 ஐ உரோம எண்ணில் எழுதினால்
(1) xxiv (2)xxix (3)xxvi (4)xxxi

9) பி.ப 4.30 மணியை 24 மணி கடிகார நேரத்தில் எழுதினால்
(1) 04.30 மணி (2) 16.30மணி (3) 18.30மணி (4) 12.30மணி

10) ஈசான மூலைக்கு எதிரான திசை
(1) அக்கினி மூலை (2) நிருதி மூலை (3) வாயுமூலை (4)வடகிழக்கு

- இல 11 முதல் 13 வரையுள்ள வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

11) ஒருவனுடைய திறமையை அறிந்து கொள்வதற்கு அவனது செயலை அவதானிக்க வேண்டும்.
(1) ஆட முடியாதவனுக்கு பூமி கோணல் என்பது போல்.
(2) குப்பையிலே கிடந்தாலும் குன்றுமணி மங்காது.
(3) கொக்கின் வெள்ளையை அறிய அது பறக்க வேண்டும். (....................)

12) குமார் அவசரதேவைக்காக அதிபரைக் காணச் சென்றார். வழியிலே அதிபரைச் சந்திக்க முடிந்தது.
(1) கும்பிடச் சென்ற தெய்வம் குறுக்கே வந்தது போல
(2) தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும் என்பது போல
(3) கூழுக்கும் ஆசை மீசைக்கும்ஆசை என்பது போல (............................)

13) கவிதா கல்வி அறிவு மிக்கவள். அவள் எப்போதும் அமைதியாகவே இருப்பாள்.
(1) விரலுக்குத் தக்க வீக்கம்
(2) நிறை குடம் தளம்பாது
(3) பாலுந் தேனும் போல (......................................)

- இல 14 முதல் 18 வரை உள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

14) பின்வரும் விலங்குகளில் பொருளாதார இலாபத்துக்காக வளர்க்கப்படாத விலங்கு யாது?
(1) ஆடு (2) பன்றி (3) நாய் (4) கோழி


15) தேங்காய்ப் பாதி அழுகும் போது முதலில் தென்படக் கூடிய அறிகுறி யாது?
(1) பூஞ்சணம் தோன்றுதல் (2) கறுப்புப் புள்ளி உண்டாதல்
(3) சிவப்பு நிறமாதல் (4) வழுவழுப்புத் தன்மை உண்டாதல்

16) தபால் நிலையத்தினால் செய்யப்படாத பணி ?
(1) ஓய்வூதியம் கொடுத்தல் (2) தந்திகளை அனுப்புதல்
(3) கடன்வசதி செய்து கொடுத்தல் (4)முத்திரை விநியோகித்தல்

17) வெடித்தல் மூலம் வித்துக்கள் பரவுகை அடையும் தாவரம் ?
(1) பாக்கு (2) இறப்பர் (3) புளியம்பழம் (4) இலவம்பஞ்சு

18) மரத்தினால் செய்யப்பட்ட மான், யானை போன்ற மரவேலைகளுக்கு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம்?
(1) சிகிரியா (2) அவுக்கனை (3)எம்பெக்கே கோயில் (4) யாப்பஹூவ

- கீழே உள்ள ஒரு வரைபு ஒரு நெசவுச் சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட துணி வகைகளையும் அவை விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட விபரங்களையும் காட்டுகிறது. அதை அவதானித்து இல 19 முதல் 25 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.







19) வெளிநாட்டு விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படும் கூடுதலான துணிவகை எவை?
..........................................................................................

20) அது எவ்வளவு?
..........................................................................................

21) உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படும் சம அளவான துணி வகைகள் எவை?
..........................................................................................

22) அது எவ்வளவு?
..........................................................................................

23) வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் மொத்தத் துணிகள் எத்தனை?
..........................................................................................

24) உள் நாட்டில் விற்பனைக்கு விடப்படும் மொத்தத் துணிகள் எத்தனை?
..........................................................................................


25) கூடுதலான துணிவகை விற்பனைக்கு விடப்படுவது உள்நாட்டிலா? வெளிநாட்டிலா?
..........................................................................................

- இல 26 முதல் 31 வரையான வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள படங்களை அவதானித்து அவற்றின் பெயர்களை ஆங்கில மொழியில் எழுதுக.


26) 
..................................

27) 
..................................

28) 
..................................

29) 
..................................


30) 
..................................

31) 
..................................

- கீழே உள்ள வினாக்களில் முதலாவது படத்துக்கு மிகவும் பொருத்தமான படத்தை ஏனைய நான்கு படங்களில் இருந்து தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

32) 
1 2 3 4

33) 
1 2 3 4

34) 
1 2 3 4

35) 
1 2 3 4

36) 

- கீழே கொடுக்கப்பட்ட வாக்கியங்கள் உணர்த்தும் கருத்து சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் இடுக.

37) ஆகாயத்தில் வீசப்படும் பொருள் நிலத்தை நோக்கி வருவது அதன் நிறை கூடியதால் ஆகும். (.........)

38) மின் கலத்தில் நேர் முனை மறைமுனை என இரண்டு பகுதிகள் உண்டு. (.........)

39) நீர் ஆவியாக மாறி வேகமாகி குளிர்ந்து மீண்டும் நீராக மாற்றம் அடையும். (........)

40) எல்லாக் கிரகங்களும் சூரியனைச் சுற்றிவர ஒரு வருடம் எடுக்கிறது. (........)

41) பூமி சூரியனைச் சுற்றி வர ஒரு வருடம் எடுக்கிறது. (........)

42) காந்தத்தின் ஒத்த முனைகள் ஒன்றை ஒன்று தள்ளுகின்றன. (.........)

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

## பகுதி - II

01) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சின்னச் சின்னப் பூச்சட்டை
சிவப்பு வண்ணப் பூச்சட்டை
வண்ண வண்ண பூச்சட்டை
வாணி அணியும் பூச்சட்டை
சட்டை அணிவோம் மேனியிலே
செருப்பை அணிவோம் காலினிலே
பொட்டையிடுவோம் நெற்றியிலே
பூவை அணிவோம் கூந்தலிலே

1. வாணி அணியும் பொருட்கள் மூன்றின் பெயர் தருக?
   1.............................. 2. .......................... 3. ..............................
2. 'பொட்டையிடுவோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக?
   ..........................................................................
3. இப்பாடலில் வந்துள்ள அடுக்கு மொழிச் சொல் ஒன்று தருக?
   ..........................................................................
4. 'பூவை அணிவோம்' என்ற சொற் தொடர் எந்தக் காலத்தில் அமைந்துள்ளது?
   ..........................................................................

பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

5. பூ - ................................ 6. சட்டை - ................................
7. செருப்பு - ............................ 8. வண்ணம் - ................................


பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த சொல் தருக.

9. கூந்தல் - ......................... 10. நெற்றி - .............................
11. இப்பாடலிலிருந்து உயர் திணைப்பெயர்ச் சொல் ஒன்றினை எழுதுக?
   ..........................................................................

02) சுருக்கமான விடை தருக.

1. ஒரு பிள்ளை தன் கைக்கடிகாரத்தின் நேரத்தின் பிரகாரம் மு.ப 7.00 பயணம் ஒன்றை ஆரம்பித்தான். அப்பயணத்தை அவனது கடிகாரத்தின் படியே மு.ப 9.35 இற்கு முடித்தான். ஆனால் அவனது கடிகாரம் சரியான நேரத்தை விட 18 நிமிடங்கள் குறைவாகவே ஓடியுள்ளது. அப்படியானால்,
   1. அவன் பயணத்தை ஆரம்பித்த சரியான நேரம் எது? ..............................
   2. அவன் பயணத்தை முடித்த சரியான நேரம் எது? ..............................
2. ஒரு பிள்ளைக்கு 3 ரொபி வீதம் 40 பிள்ளைகள் உள்ள 4 வகுப்புக்கு வழங்குவதற்கு எத்தனை ரொபிகள் தேவை?
   ..........................................................................
3. ஒரு பிள்ளை ரூபா 12.00 வீதம் இரண்டு பயிற்சிப் புத்தகங்களும் ரூ 7.00 வீதம் மூன்று பென்சில்களும் விலைக்கு வாங்கி விட்டு ரூ 50.00ஐ வியாபாரியிடம் கொடுத்தால் மிகுதிப்பணமாக அவனுக்கு எவ்வளவு கிடைக்கும்?
   ..........................................................................
4. 2004 ஜனவரி 1 ஆம் திகதி வியாழக்கிழமை ஆயின் 2004 பெப்ரவரி மாத முதல் வாரத்தின் வியாழக்கிழமை என்ன திகதி?
   ..........................................................................
5. நோயாளி ஒருவருக்கு 6 மணித்தியாலத்துக்கு ஒரு முறைப் படியாக ஒரு வில்லை குறையும் ஒழுங்கில் கொடுக்கும் படி சில வில்லைகள் வைத்தியரால் கொடுக்கப்பட்டது. நோயாளிக்கு முதலில் 5 வில்லைகள் கொடுக்கப்பட்டன.
   1. மேற்கூறிய உரிய ஒழுங்கின் படி வில்லைகளை எடுப்பதற்கு நோயாளி எத்தனை வில்லைகள் வாங்க வேண்டும்.
      ..........................................................................
   2. நோயாளி முதன்முறையாக திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு வில்லைகளைக் குடித்தானாயின் இறுதி வில்லைகளை எந்த நாளில் எத்தனை மணிக்கு குடிப்பான்? ..............................


03) கல்விச்சுற்றுலாவின் போது சென்ற மாணவர்களுள் P,Q,R,S,T,U,V என்னும் ஏழு மாணவர்கள் சேகரித்த சிப்பிகளின் விபரங்கள் பற்றிய அட்டவணை ஒன்று கீழே தரப் பட்டுள்ளது. அவற்றைப்பயன்படுத்தி கீழே உள்ள வினாக்களுக்க விடை தருக.






1. R இடமுள்ள சிப்பிகளின் எண்ணிக்கையிலும் 150 கூடவாக V வைத்திருந்தான். எனின் V வைத்திருக்கும் முத்திரைகளின் எண்ணிக்கையை வரைபின் உரிய கட்டத்தில் குறித்துக்காட்டுக?
2. கூடுதலாக சிப்பிகளை வைத்திருப்பவர் யார்? ..............................
3. சமமான எண்ணிக்கையுடைய சிப்பிகளை வைத்திருப்பவர்கள் யாவர்?
   ..........................................................................
4. S இடமும் U விடமும் இருக்கும் சிப்பிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
   ..........................................................................
5. R இடமுள்ள சிப்பிகளின் கால்பங்கை Q க்கு கொடுக்கிறான். பின்னர் T தன்னிடமுள்ள சிப்பிகளின் 1/5 பங்கை R இற்கு கொடுக்கிறான், தற்போது R இடமுள்ள சிப்பிகளின் எண்ணிக்கை யாது? ..............................



கீழே தரப்பட்டுள்ள முதல் உள்ள கூடுகளின் எண்கள் குறித்த ஒரு கோலத்தில் தரப்பட்டுள்ளன. கடைசிக்கூட்டின் வெற்றிடத்தைத் தருக.

6. 7. 8.




9. 99 என்பதை உரோமன் இலக்கத்தில் தருக? ..............................
10. ஒவ்வொன்றும் 25cm பரப்பளவுடைய 4 சதுரங்களைக் கொண்டு ஒரு சதுரம் அமைக்க முடியும். அமைக்கப்பட்ட இந்தச் சதுரத்தின் சுற்றளவு யாது?
    ..........................................................................
11. 1 வாரம் 3 நாள் 10 மணித்தியாலத்தை மணித்தியாலத்தில் தருக?
    ..........................................................................
12. பி.ப 6.28 என்பதை நியம நேரத்தில் தருக?
    ..........................................................................
13.  இதிலுள்ள நிரைகளின் எண்ணிக்கை யாது?
    ..........................................................................
14. நிரல்களின் எண்ணிக்கை?
    ..........................................................................
15.  என்பது குறிக்கும் எண் யாது?

04) ஆக்கத் தொழிற் பாடத்தில் நீங்கள் கற்றுக்கொண்டதற்கு அமையக் கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. அடிப்படை நிறங்கள் யாவை?..............................
2. நீலம், மஞ்சள்,சிவப்பு ஆகிய நிறங்களை கலந்தவுடன் பெறப்படும் நிறம் யாது?
   ..........................................................................
3. பம்பரம் தயாரிக்கத் தேவையான பொருட்கள் மூன்று தருக?
   ..........................................................................
4.  இங்கே காணப்படும் பண்டைக்காலச் சிங்கள சிங்கள அலங்காரங்களுள் ஒன்றாகும். அதன் பெயர் யாது? ..............................
5.  அருகே காணப்பட்டது இரேகை வகைகளில் ஒன்று. இந்த ரேகையின் பெயர் யாது?
   ..........................................................................

05) கீழே 5 மாகாணங்களும் அவற்றின் தலைநகரங்களும் தரப்பட்டுள்ளன. அந்த 5 மாகாணங்களுக்கும் பொருத்தமான தலைநகரங்களைக் குறிக்கும் எண்ணை வெற்றுக்கூட்டில் எழுதுக?

| மாகாணம் | | தலைநகரம் |
|---|---|---|
| 1. வடமேல் மாகாணம் | (............) | 1. அநுராதபுரம் |
| 2. வடமத்திய மாகாணம் | (............) | 2. இரத்தினபுரி |
| 3. மத்திய மாகாணம் | (............) | 3. பதுளை |
| 4. ஊவா மாகாணம் | (............) | 4. புத்தளம் |
| 5. சப்பிரகமுவ மாகாணம் | (............) | 5. கண்டி |

06) இலக்கம் 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. நிகழ்வு - காயத்திரி ஒருவருக்கும் கொடுக்காது கொண்டு சென்ற மலர் செடிகளை நடுவதற்கு முயற்சிக்கவில்லை.
   1. போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து
   2. வைக்கோல் பட்டடை நாய்
   3. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் (............)
2. நிகழ்வு - பிருந்தா வறுமையிலும் செம்மையாக வாழ்க்கை நடத்தினாள். அவள் செயல் எதற்கு ஒப்பானது.
   1. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
   2. இரக்கப் போனாலும் சிறக்கப்போ
   3. பாத்திரமறிந்து பிச்சை கொடு (...........)
3. நிகழ்வு- அளவுக்கு மிஞ்சிய ஆசையால் களவெடுத்த சுந்தர் துன்பத்தை அனுபவித்தான்.
   1. சிறுதுளி பெருவெள்ளம் 2.வறுமையிலும் செம்மையாக வாழ்
   3. பேராசை பெருநட்டம் (...........)
4. நிகழ்வு - ஒருவரை சிறுவயதிலே திருத்திவிட வேண்டும். அவனை வயது சென்றபின் திருத்துவது கடினமான காரியமாகும்.
   1. அழுதபிள்ளை பால் குடிக்கும்
   2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
   3. படைக்குப் பிந்து பந்திக்கு முந்து (............)

*விடைகள் - அடுத்தவாரம்.*

*ஆசிரியர்* - T.அம்பிகைபாகன் ஆசிரிய ஆலோசகர்
மேல்மாகாண கல்வித் திணைக்களம். B Ed Spl Trd Tamil.

## சென்றவார விடைகள்...

(01) viii (02) viii (03) க (04) பணம் (05) 20 (06) 1 (07) 3
(08) 3 (09) 1 (10) 2 (11) 4 (12) 1 (13) 2 (14) 3 (15) 2
(16) 2 (17) 1 (18) 3 (19) 2 (20) 5 (21) 12மணி (22) 24
(23) 1 (24) 3 (25) 1000m (26) 1 (27) 1 (28) 3
(29) 2 (30) 2 (31) 3 (32) 2 (33) 1 (34) 2 (35) 3 (36) 3
(37) 3 (38) c (39) 85 (40) 11

### வினாத்தாள் - 02

**I)**
(01) வயற்காட்சி (02) என்னை வரவேற்பது போல்
(03) தலைகுனிந்து நிற்கும் சிறுமையைப் போல்
(04) வானத்து முகில்கள் நேரடியாகக் கவிழ்ந்து விழுந்தது போல்
(05) நான் (06) இரட்டைமொழி/ இரட்டைக்கிளவி (07) குவியல் குவியலாக
(08) மெல்ல/விழுந்தது போல் (09) பச்சைப் பசேலெனக் காட்சியளித்தது
(10) நடந்தேன்

**II)**
(1) 9 கதிரைகள் (2) ரூபா 160.50 (3) 28 cm (4) 11.30 (5) 3.45மணி

**III)**
(1) நீரில் மிதக்கக் கூடியவை - மென்பந்து, பிளாஸ்ரிக்கப், தகரமூடி, கரித்துண்டு, மரத்துண்டு, நீரில் கரையக்கூடியவை - செங்கட்டி,

**IV)**
(1) 3 (2) 2 (3) 3 (4) 2 (5) 3 (6) 3 (7) 2 (8) 3 (9) 1 (10) 2

**V)**
(1) 2 (2) 1 (3) 4 (4) 5 (5) 3 (6) 7 (7) 6 (8) 9 (9) 10 (10) 8

**VI)**
(1) பிழை (2) பிழை (3) சரி (4) பிழை (5) சரி (6) பிழை
(7) பிழை (8) பிழை (9) சரி (10) பிழை

**VII)**
(1) ரூபா 35.00 (2) ரூபா 36.00 (3) ரூபா 549.00 (4) ரூபா 97.50
(5) ரூபா 75.00 (6) ரூபா 315.00 (7) ரூபா 35.00 (8) அரிசி, றவ்வை
(9) ரூபா 450.00 (10) 70 இலட்டுகள்

## சின்னஞ்சிறு செய்திகள்

### இசைப் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

சங்கானை—

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவின் கலாசார அலுவலகத்தின் ஊடாக நடத்தப்பட்டு வரும் இசைப்பயிற்சி வகுப்புகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

இந்தப் பயிற்சி வகுப்புகள் சங்கானை கலாசார மண்டபத்தில் நடத்தப்பட்டு வருகிறது. கிற்றார், ஒகன் பயிற்சி வகுப்புகள் காலை 9 மணி முதல் 12.30 மணிவரையும், மிருதங்கம், புல்லாங்குழல், வயலின் பயிற்சி வகுப்புகள் மாலை 2.30 முதல் 4.30 மணிவரையும் நடைபெறுவதாகக் கலாசார உத்தியோகத்தர் ரஜனி கந்தசாமி தெரிவித்தார். (48)

### கழுத்துப்பட்டி வழங்கல்

சுன்னாகம்—

சுன்னாகம் றோட்டறிக் கழகத்தினர் தமது 12 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மயிலணி சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு 160 கழுத்துப் பட்டிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (72)

# சிறாரை வேலைக்கு அமர்த்துவோர்மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ். உதவித் தொழில் ஆணையாளர்

யாழ்ப்பாணம் —

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அதனை மீறி வேலைக்கு அமர்த்தும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

1956 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க பெண்கள், இளைஞர்கள், சிறுவர்களைச் சேவையில் ஈடுபடுத்தல் சட்டத்தின்படி 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களைப் பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ வேலைக்கமர்த்தப்படுவது முற்றுமுழுதாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுதல் தொடர்பாக ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன.

பண்டிகைக் காலத்தில் நடைபாதை வியாபார நிலையங்க ளில் இவ்வாறான சிறுவர்களை வேலைக்கமர்த்தும் செயற்பாடுகள் இடம்பெறுவதாக அறியமுடிகிறது.

இதனைத் தடுக்கும் முகமாகப் பொலிஸ் மற்றும் சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்களுடன் இணைந்து தொழில் திணைக்களத்தால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த அறிவுறுத்தலையும் மீறி சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்தும் தொழில் தருனர்களுக்கெதிராக நீதிமன்றம் மூலம் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்ட ஏற்பாடுகளின்படி சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவோர் 6 மாத கால சிறைத்தண்டனைக்கு ஆளாவதுடன், 10 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தையும் செலுத்த வேண்டும். அத்துடன் நீதிபதியால் தீர்மானிக்கப்படும் நட்ட ஈட்டுத் தொகையையும் செலுத்த நேரிடும் என்பதையும் அறியத் தருகிறேன் எனத் தெரிவித்தார்.

## விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம் —

இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை இன்று திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இயக்குநர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரா அறிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவங்களைப் பெறவருபவர்கள் தங்களது தொழில் அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், மேற்படி கற்கைநெறிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விண்ணப்பப்படிவங்கள் உள்ளதால் குறிப்பிட்ட தினத்திலே விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் இயக்குநர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை நான்கு



பெயர் : உ.கவிநிலவன்
முகவரி : யாழ்ப்பாணம்.

### அகவை நான்கு



பெயர் : அ.மதுஷாளினி
முகவரி : புதுக்குடியிருப்பு.

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ....................

முகவரி ....................

பிறந்த ஆண்டு ....................

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

....................
பெற்றோர் ஒப்பம்



யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்துக் கான நுழைவாயில் வளைவைக் கல்லூரி முன்னாள் அதிபர் வ.பஞ்சலிங்கம் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## மானிப்பாய் அறநெறிப் பாடசாலையின் ஆண்டு நிறைவும் பரிசளிப்பு நிகழ்வும்

மனிப்பாய் —

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலை அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு - மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ். இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன், உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய அதிபர் என்.பஞ்சாட்சரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் த.சிதம்பர நடராஜா வாழ்த்துரையையும், ஆலயக் குரு பிரம்ம ஸ்ரீ ஜெயகுமாரகுரு ஆசியுரையையும் வழங்குவர்.

இந்து கலாசார அமைச்சால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கலும், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களைக் கௌரவித்தலும் இயல் இசை நடன நிகழ்வுகளும் நடைபெறும். (101)

## பொன்விழாவை முன்னிட்டு இளைஞர்கள் இரத்ததானம்

பண்டத்தரிப்பு—

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகமும், சனசமூக நிலையமும் ஐம்பதாவது பொன் விழா ஆண்டை நிறைவு செய்வதை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் இளைஞர் முன்னேற்றக் கழக இளைஞர்கள் உட்படப் பலர் இந்த இரத்ததான நிகழ்வில் பங்குபற்றினர். மேலும் இந்தக் கழகத்தின் பொன்விழா நிறைவு ஆண்டை முன்னிட்டு சைக்கிளோட்டப் போட்டி, மரதன் ஓட்டம் உட்பட்ட விளையாட்டுப் போட்டிகளும், சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கழக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (43)

## ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் —

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் - அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை புதுவருடப்பிறப்புப் பிரார்த்தனை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

## நவாலி இடிகுண்டு கிணற்றை புனரமைக்குமாறு கோரிக்கை

சுதுமலை—

நவாலி இடிகுண்டு கிணற்றுப் புனரமைப்பு வேலையை உலக உணவுத்திட்டத்தின் கீழ் முன்னுரிமைப் படுத்துமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அந்தப் பகுதி பெரும்பாக உத்தியோகத்தர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

நவாலிப் பகுதியில் காணப்படும் இடிகுண்டு கிணறு மிகவும் நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் கவனிப்பாரற்றுப் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது.

இந்தக் கிணற்றிலிருந்து பல்வேறுபட்ட விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டு வருகிறது.

இந்தக் கிணற்றைப் புனரமைப்புச் செய்யப்படாவிட்டால், பல விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்ச முடியாமல் போகும்.

எனவே, உலக உணவுத்திட்டத்தின் கீழ் இடிகுண்டு கிணற்றை முன்னுரிமைப்படுத்திப் புனரமைத்து உதவுமாறு பிரதேச செயலாளரால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (44)


## புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் 94 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைவர் த.சண்முகலிங்கம், செயலாளர் ந.சிவராஜா, பொருளாளர் வி.தயாபரன், உப தலைவர்களாக இரா.செல்வவடிவேல், வ.பேரின்பநாயகம், உப செயலாளர்களாக மாணிக்கவாசகர், இ.தவகோபால், பரீட்சை செயலாளராக கலாநிதி வ.கந்தசாமி, சமய பிரசார அமைச்சர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் ஆகியோரைக் கொண்ட 24 பேர் செயலவை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## தவக்கால நற்சிந்தனை



இந்தப் புனித வாரத்திலே நமது மீட்புக்கு வழிகோலிய யேசுவின் திருப்பாடுகளை நாம் நினைவு கூர்கிறோம். யேசுவின் பாடுகளை முன்னறிவிக்கும் யூதாசின் சதி பற்றிக் காண்கிறோம். யூதாஸ் ஏழையல்ல. இருப்பினும் 30 வெள்ளிக் காசுக்காக யேசுவைக் காட்டிக் கொடுக்கும் சதிக்கு உட்பட்டான். அன்றைய சதி முயற்சியானது இன்று நாம் வாழும் உலகிலும் பல வழிகளிலே நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அன்றாட வாழ்வு நிகழ்சிகளில் சின்னத்திரையின் முடிவுகாணா தொடர் நாடகங்கள் போல தொடர்வதைக் காண்கிறோம். பணத்துக்காகச் சதி, பதவிக்காகச் சதி, சாதிக்காகக் கொலை, அரசியலில் சதி, நாட்டுக்கு நாடு எல்லைப் போர், மத வெறிக்காகத் தீ வைப்பு, கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் எனப் பல வழிகளில் சதித்திட்டங்கள் தீட்டப்பட்டு மக்கள் மிருகங்களாவதை இன்று நம் கண்கூடாகக் காண்கிறோம். இதன் மூலம் யேசு இன்றும் பாடுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார். இவை போன்ற சதிகளுக்கு நாமும் காரணமாக இருந்தால் இந்த நாட்களில் இறைவனிடம் மன்னிப்பு வேண்டுவோம். அவரின் மகிமைக்காக எல்லாத் தவறுகளையும் விட்டொழித்து உயிர்த்த ஆண்டவரை எதிர்கொள்ளத் தயாராவோம். உம் இல்லத்தின் மீது எமக்கு உண்டான ஆர்வம் என்னை எரித்து விட்டது என்று அறிக்கையிட முனைவோம்.

- யோ.தார்சீசியஸ்

## கருத்தமர்வு

யாழ்ப்பாணம் —

பொதுச்சேவையில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான நடப்பு விவகாரங்கள் தொடர்பான கருத்தமர்வு ஒன்று கடந்த 5ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை நல்லூர் கமநல சேவைகள் திணைக்கள மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி திணைக்களம், பயிற்சி திணைக்களம் என்பவை இணைந்து இந்தச் செயலமர்வை ஒழுங்கு செய்திருந்தது. இந்தச் செயலமர்வை யாழ்ப்பாணத்தில் நடத்த யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகம் ஒழுங்கு செய்திருந்தது.

இந்தக் கருத்தமர்வில் யாழ். மாவட்டத்தில் பொதுச்சேவையில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ரி)



இது தண்ணீர் வற்றிய குளம் என நீங்கள் நினைத்தால் அது பெரும் தவறு. புத்தூர் சிவன்கோவில் வீதியே இதுவாகும். மிக நீண்டகாலமாக மக்கள் பாவனை மிக்க இந்த வீதி திருத்தப்படுவதற்கான எந்த ஏற்பாடும் இதுவரை வலி.கிழக்கு பிரதேச சபையால் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (110)

# வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு கழிவுகள் இறுதியகற்றலில் புதிய நடைமுறை

வட்டக்கச்சி

தமிழீழ சுகாதார சேவையினரும், கரைச்சிப் பிரதேச சபையினரும் இணைந்து நகர் கழிவுகள் அகற்றுவதில் காணப்பட்ட சிரமங்களை கவனத்திற் கொண்டு, திண்மக்கழிவுகளை அகற்றுதற்கு நெகிழக்கூடிய பொலித்தீன்பைகளில் திண்மக்கழிவுகளைச் சேர்த்து - இறுதியகற்றும் நடைமுறையை கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் கடுமையாக செயன்முறைக்கு கொண்டுவந்தனர்.

எனவே வியாபார நிலைய உரிமையாளர்கள் அனைவரும் கவனத்திற் கொண்டு பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திண்மக்கழிவுகள் அகற்றுவதற்கு நெகிழக்கூடிய பொலித்தீன் பைகள் முறையே - உக்கும் தன்மையுடைய கழிவுகளுக்கு கறுப்பு நிற பொலித்தீன் பைகள், உக்காத தன்மையுடைய பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளுக்கு நீல நிறப் பொலித்தீன் பைகளும் பயன்படுத்தப்படும்.

எந்த காரணம் கொண்டும் உக்காத பொருட்களை, உக்கும் பொருட்களுடன் சேர்த்து சேகரிக்க வேண்டாம். உணவு மற்றும் உக்கும் கழிவுகளை பொலித்தீன், பிளாஸ்ரிக் கொள்கலன்களைச் சேர்த்துப் பொதிசெய்ய வேண்டாம்.

உ+ம்: உணவு சுற்றும் பொலித்தீனுடன் உணவுக்கழிவுகளைச் சேகரிக்க வேண்டாம்.

பொலித்தீன், பிளாஸ்ரிக் சிகையலங்கார நிலைய் மயிர் போன்ற கழிவுகள் வாரம் ஒருமுறை இறுதியகற்றப்படும். மட்டைகள், பெட்டிகள், வெற்றிலைத்தட்டு, வாழைத்தண்டு, சருகு என்பன மடிக்கப்பட்டு புறம்பாக கட்டி வைக்கப்படவேண்டும். மயிர்கள் மஞ்சள் நிறப்பைகளில் சேகரிக்கப்பட வேண்டும்.

தங்கள் நிலையத்தின் திண்மக்கழிவின் தன்மை, திண்மக்கழிவின் அளவுக்கேற்ப நெகிழக்கூடிய பொலித்தீன் பைகளை 6 ரூபா செலுத்தி பிரதேச சபை அலுவலகத்தில் அல்லது வர்த்தக சங்கத்திடம் பெற்றுக்கொள்ள முடியும்.

நெகிழ்த்தன்மை திண்மக்கழிவுகள் அகற்றும் பொலித்தீன் பைகள் நடைமுறைப்படுத்தும் நாளிலிருந்து சகல வர்த்தக உரிமையாளர்களும் ஒரே நடைமுறையை பின்பற்றி திண்மக்கழிவுகளை தாங்களே சேகரித்து வாய்ப்பகுதி கட்டப்பட்ட நிலையில் தினமும் காலை 6 மணிக்கு வர்த்தக நிலையங்களின் முன்னால் வைக்கப் படவேண்டும். இவை காலை 10 மணிக்கிடையில் பிரதேச சபையின் தொழிலாளர்களால் அகற்றப்படும்.

வியாபார நிலையங்களில் நெகிழ் தன்மை பொலித்தீனில் நிரப்பப்பட்ட கழிவுகள் பிரதேச சபை தொழிலாளர்கள் இறுதியகற்றல் வாகனத்துக்கு எடுப்பதற்கு ஏற்றவகையில் அடையாளப்படுத்தி வைக்கப்படவேண்டும்.

இந்த நடைமுறை அமுல்படுத்திய பின்னர் திண்மக்கழிவுகளை நிலையத்தின் முன்பகுதி, பின்பகுதிகளில் குவித்தல். நீரோட்ட வாய்க்கால்களில் சேர்த்தல், நிலைய முன்பகுதி, பின்பகுதிகளில் எரித்தல் தவிர்க்கப்பட வேண்டும். வியாபார நிலைய முன்பகுதி, பின்பகுதிகளில் ஒதுக்கப்படும் கழிவுகள் தங்கள் கழிவுகளாகவே கருதப்படும். தங்கள் நிலைய சூழலில் சுத்தமாக பேணுவது அவர்களின் கடமையாகும்.

திண்மக்கழிவகற்றல் முறையை நடைமுறைப்படுத்தும் பிரதேச சபை, சுகாதார உத்தியோகத்தர்கள், வர்த்தகர் சங்கம் ஆகியோருக்கு ஒத்துழைப்பை வழங்கி எமக்கே சேவை செய்கிறார்கள் என்ற உணர்வுடன் ஒத்துழைத்தல் வேண்டும்.

திண்மக்கழிவகற்றல் முறையை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படின் தமிழீழ சுகாதார சேவைகள், பிரதேசசபைகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் தொடர்பு கொண்டு தெளிவை பெற்று செயற்படவும்.

இந்த நடைமுறைகள் மீறப்பட்டு திண்மக்கழிவுகள் நகர சுற்றாடல் சுகாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தத்தக்க வகையில் செயற்படும் வியாபார நிலையங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழீழ சுகாதார சேவையினரும், கரைச்சிப் பிரதேச சபையினரும் தெரிவித்துள்ளனர்.

(09)

## சமுர்த்தி திட்டம் நடைமுறை!

மன்னார்

மன்னார் மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் சமுர்த்தி திட்டம் 153 கிராம அலுவலர்கள் பிரிவில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் உதவி திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றும் திருமதி ஏ.நிக்கலாஸ்பிள்ளை சமுர்த்தி திட்டத்தின்கீழ் மன்னார் உதவி ஆணையாளராக நியமிக்கப் பட்டுள்ளார். (201)

## பற்சிகிச்சை


கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவையினரின் நடமாடும் பற்சிகிச்சைப் பிரிவினரால் வள்ளிபுனம் பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதில் 150 இற்கும் மேற்பட்ட சிறார்கள் பயன்பெற்றுள்ளனர்.

இதேவேளை - சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் புளியங்குளம் ஆயப்பகுதிப் பணியாளர்களுக்கான பொது மருத்துவச் சேவையொன்றும் நடத்தப்பட்டது.

இதில் 175 இற்கும் மேற்பட்டோர் பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)



ஆனையிறவு - தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் நிர்மலன் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டியில் - சிறார்கள் விளையாட்டில் ஈடுபடுவதையும், வெற்றியீட்டிய சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## மெய்வன்மை திறனாய்வுப் போட்டி

கிளிநொச்சி

கிளிநொச்சி - கண்டாவளை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட 21 பாடசாலைகளின் மாணவர்களுக்கு இடையிலான மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் கடந்த 6 ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

பரிசளிப்பு நிகழ்வு கண்டாவளை கோட்டக் கல்வி அதிகாரி வி.இராசகுலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (கு)

## 279 கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வட்டக்கச்சி

கரைச்சிப் பிரதேச சபையினரால் இந்த வருட முற்பகுதியிலிருந்து கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

ஏ-9 பிரதான வீதி, கனகபுரம், பரந்தன், கணேசபுரம், திருநகர், 155 ஆம் கட்டை, இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி சந்தை, முரசு மோட்டை, புளியம்பொக்கணை போன்ற பகுதிகளிலே இந்த அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து சுகாதார சேவையுடன் இணைந்து கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் படவுள்ளன. இதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் கடந்த பெப்ரவரி மாதம் 100 கட்டாக் காலிகளும், மார்ச் மாதம் 179 கட்டாக்காலிகளுமாக மொத்தம் 279 கட்டாக்காலிநாய்கள் அழிக்கப்பட்டதாகவும் கரைச்சி பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் தெரிவித்தார். (09)

## கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி

மன்னார்

மன்னார் நகர பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 33 விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

மன்னார் நகர பிரதேச செயலர் டயானி டிமெல் தலைமையில் கடந்த 8,9 ஆம்திகதிகளில் இப்போட்டி நடைபெற்றது. இதில் முதலாமிடத்தை பேசாலை புனித வெற்றிநாயகி விளையாட்டுக் கழகமும், இரண்டாமிடத்தை பேசாலை புனித யூசியா விளையாட்டுக் கழகமும், மூன்றாமிடத்தை தாழ்வுபாடு விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன. (கு)

# புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்ட பேரணி!

மன்னார்

மட்டக்களப்பில் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களை விடுவிக்கக்கோரி நேற்று முன்தினம் காலை மன்னார் நகரில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது.

மன்னார் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், மாவட்டத்தில் இயங்கும் ஏனைய அரசசார்பற்ற தன்னார்வ தொண்டுநிறுவனங்களும் இணைந்து நடத்திய இந்தக் கண்டனப் பேரணி நேற்று முன்தினம் காலை 10.20 மணியளவில் மன்னார் தமிழர் புனர்வாழ்வுக்கழக காரியாலயத்திலிருந்து புறப்பட்டது.

இந்தக் கண்டனப் பேரணி மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, வைத்தியசாலை வீதி, புனித செபஸ்தியார் பேராலய வீதி, பசார் வீதி வழியாக மன்னார் மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும் மகஜரை மன்னார் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கத்திடம் -

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் மரியநாயகம் குரூஸ் கையளித்தார்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், மனித உரிமைகள் ஆணைக்குழு, மன்னார் ஆயர் ஆகியோருக்கும் இந்த மகஜர் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மோ)

# இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 184 பேரின் குடும்பங்கள் வறுமை நிலையில்

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் 1996-1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 184 பேரின் குடும்பங்கள் வறுமை நிலையில் வாடுகின்றன.

1996 ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவத்தினர் கிளிநொச்சியை ஆக்கிரமித்தனர்.

கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்கள் அக்கராயன், மல்லாவி, ஜெயபுரம், புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் தங்கியிருந்தன.

கிளிநொச்சியில் தமது வீடுகளில் உள்ள உடமைகளை எடுத்து வரச் சென்ற 184பேர் இராணுவத்தினரால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்டவர்களில் 72 பேர் 1998 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளால் ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கை மூலம் கிளிநொச்சி நகரம் மீட்கப்பட்டதையடுத்து எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்டவர்களில் 12 பேர் வரை எலும்புக் கூடுகள் மூலம் அடையாளங்காணப்பட்டனர்.

இந்த நிலையில் படுகொலை செய்யப்பட்ட 184 பேரின் குடும்பங்களும் வறுமை நிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# வடக்கு - கிழக்கு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கத் தீர்மானம்

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின்அடிப்படையில் இரண்டாம் கட்ட வீடமைப்புத் திட்டத்தின்கீழ் 1500 வீடுகள் முழுமையாக அமைக்கப்படவுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ராஜன் குடியிருப்பு, கண்ணகைபுரம் - படித்த வாலிபர் திட்டம், கண்ணகைபுரம் கிழக்கு, காந்தி கிராமம், கோணாவில், யூனியன்குளம், பொன்நகர், விவேகானந்தநகர், உதயநகர், அம்பாள்குளம், ஆனந்தபுரம்மேற்கு, அம்பாள்நகர், சாந்தபுரம், இரத்தினபுரம் வீதி, கண்ணன் கோவிலடி, மருதநகர், திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, ஆனந்தம் பண்ணை, சிவநகர்-1, நாவலர் பண்ணை, வள்ளுவர் பண்ணை, சோலைநகர், சாலோம் நகர் ஆகிய 24 கிராமங்களிலும் -

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பரந்தன்மேற்கு, விளாவோடை, விஸ்தரிப்புத்திட்டம், கோரக்கன்கட்டு, புதுக்குளம், ஊரியான், பழைய கோரக்கன்கட்டு, முரசு மோட்டை 1 ஆம் யுனிற், ஐயன் கோவிலடி, பழையகமம், மடுக்கரை ஆகிய 11 கிராமங்களிலும் -

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் ஆலங்கேணி, செட்டியகுறிச்சி, சித்தன்குறிச்சி, மட்டுவில்நாடு கிழக்கு, மட்டுவில்நாடு மேற்கு, பரமன்கிராய் ஆகிய 6 கிராமங்களிலும் -

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் முகாவில், மல்லல், முருகந்தநகர், மாசார், சோரன்பற்று, சின்னத்தாளையடி, செந்தில்நகர், இத்தாவில் ஆகிய 8 கிராமங்களிலுமாக ஐம்பது கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

ஐம்பது கிராமங்களிலும் இந்த ஆண்டில் ஆயிரத்து 500 வீடுகளை முழுமையாக நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டு, இதற்கான பயனாளிகள் தெரிவு பூர்த்தியாக்கப்பட்டு அந்தந்தப் பிரதேச செயலகங்களின் விளம்பரப் பலகையில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் அரசியல் கலந்துரையாடல்

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் சமகால அரசியல் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

உதயநகர் கிழக்கு கிராமத்தில் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

சிறப்புரையை அரசியற்துறையைச் சேர்ந்த குயிலன்பன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கிராம மக்களால் அன்னை பூபதியின் நினைவை முன்னிட்டு எதிர் வரும் 16 ஆம் திகதி அடையாள உண்ணாவிரதம் கடைப்பிடிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை - கனகபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் அருள் தலைமை தாங்கினார்.

இந்தக் கலந்துரையாடலின் போதும் எதிர்வரும் 16 ஆம் திகதி அன்னை பூபதியின் நினைவை ஒட்டிய அடையாள உண்ணாவிரதத்தைக் கடைப்பிடிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் சிறப்புரையை சமாதான செயலகத்தைச் சேர்ந்த தர்சன் நிகழ்த்தினார்.

(கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.

- திருக்குறள்.

## நமது நோக்கு

### வருத்தமளிக்கும் தடை!

சமாதான முயற்சிகள் நெருக்கடியானதொரு கட்டத்தை எட்டியிருக்கின்ற சூழலில் - கனடிய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்திருக்கிறது.

இந்தியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா வரிசையில் கனடாவும் இணைந்திருக்கிறது. இந்தத் தடையின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நிதியுதவிகள் கிடைப்பதைத் தடுப்பதைத் தவிர, கனடிய அரசால் வேறெதையும் செய்துவிடமுடியாது.

ஆனால், சமாதான முயற்சிகள் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள தருணத்தில், சர்வதேச நாடுகள் இப்படிப்பட்ட தடைகளை விதிப்பதன் மூலம் எதையும் சாதித்து விடலாம் எனக்கருதுவதுதான் தவறானதாகத் தெரிகிறது.

ஏனென்றால், விடுதலைப்புலிகளை கனடாவிலோ அல்லது வேறுநாடுகளிலோ தடைசெய்வதன் மூலம்- இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டுவரவோ, இனப்பிரச்சினையைத் தீர்த்து விடவோ, தமிழ்மக்களின் எழுச்சியையும் போராட்டத்தையும் தணித்துவிடவோ முடியாது.

இப்படிப்பட்ட நிலையில், கனடா போன்ற நாடுகள் புலிகள் மீது தடைவிதிப்பதன் மூலம் அவர்களை அழுத்தங்களுக்குட்படுத்த நினைப்பது முட்டாள்தனம். புலிகள் அழுத்தங்களுக்கு பணிந்து போகும் ஒரு அமைப்பல்ல. இது ஒரு விடுதலைப்போராட்ட இயக்கம் என்பதை சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ளவேண்டும்.

தடைகள் மூலம் புலிகளை பணியவைக்கவோ, அழுத்தம் கொடுக்கவோ முற்பட்ட சக்திகள் எல்லாம் அந்த முயற்சிகளில் தோல்விகண்டிருக்கும் நிலையில், கடைசியாக கனடா இணைந்து கொண்டது வருந்தத்தக்கது.

கடந்த நான்கு வருடகால போர்நிறுத்தத்தின் போது - தமிழ்மக்களின் சார்பில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட சமாதான முயற்சிகளையும், அதற்குக் கொடுக்கப்பட்ட உயர்ந்தபட்ச விலையையும், கனடா சரிவரப்புரிந்து கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

தமிழ் மக்களுக்கு எதையுமே கொடுக்கத்தயாராக இல்லாத சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளிடமிருந்து பேச்சுக்கள் மூலம் எதையும் பெறமுடியாது என்பது நிருபணமாகியிருக்கிறது. நான்கு வருட சமாதான காலம் இதைத்தான் உணர்த்தியிருக்கிறது.

இந்தக்காலத்தில் எந்தவொரு தீர்வையாவது கொடுக்க சிங்கள அரசுகள் முன்வந்தனவா? அது மட்டுமல்ல, விடுதலைப்போராட்டத்தை அழிக்க புல்லுருவிகளை உருவாக்கிவிட்டு கோழைத்தனமான படுகொலை அரசியலையே சிங்கள அரசு நடத்திவருகிறது.

சமாதான காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட இழப்புக்களின் பத்திலொரு பங்கைக்கூட சிங்கள தேசம் எதிர்கொள்ளவில்லையே!

ஆயினும், கனடா போன்ற நாடுகள் சிங்கள பேரினவாத அரசுகளின் பேச்சை நம்பி புலிகள் இயக்கத்தை தடைவிதித்திருப்பது - ஒட்டுமொத்த தமிழ்மக்களையும் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் தமிழர்கள் உள்ள கனடாவில் புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடையால், சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு மேலும் உடுக்கடித்து உசார்கொடுத்ததற்கு சமனானதாகவே உள்ளது.

ஏற்கனவே தமிழ்மக்களை லட்சக்கணக்கில் சவப்பெட்டிகளில் வடக்கே அனுப்புவோம் என்று கொக்கரிக்கும் சிங்கள பேரினவாதிகள் - இனிமேல் ஊழிக்கூத்தாடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பொறுமையின் உச்சத்துக்கே சென்றுவிட்ட புலிகள், சர்வதேச சமூகத்தின் விருப்பத்துக்காகவேனும் - சண்டைக்குச்செல்லாமல் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும் நிலையில் - கனடா எடுத்திருக்கும் நிலைப்பாடு அவர்கள் நிச்சயம் சமாதானப் பேச்சுக்களில் நம்பிக்கை இழக்கவே செய்யும்.

புலிகள் சண்டைபிடித்த போது தடைசெய்யாத நாடுகள் அவர்கள் சமாதானப் பேச்சில் ஈடுபடும் போது தடை செய்கின்றன என்றால் - மீண்டும் சண்டைக்குச் செல்லுங்கள் என்று அர்த்தம் கொள்ளப்படவும்கூடும்.

கனடிய அரசின் இந்த திடீர் அறிவிப்பு - புலிகள் தரப்பு சமாதானப் பேச்சுக்களில் இருந்து ஒதுங்கிக் கொள்வதற்கு ஒரு காரணமாகிவிடவும் கூடும்.

அதேவேளை, சிங்கள பௌத்த பேரினவாதிகளின் பிரசாரங்களுக்கு எடுபட்ட கனடாவிடம் -தமிழ் மக்களின் போராட்ட நியாயங்கள் சரியான முறையில் எடுத்துச் சொல்லப்படவில்லை என்பது தெளிவாகிறது.

எனவே, தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்பான சர்வதேச மயப்படுத்தலில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதையும் இந்தத்தடை எடுத்துக் காட்டியிருக்கிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பது போல

# அம்பலமான கருணாகுழு -அரசு உறவு!

### ஊர்சுற்றியார் பார்வையில்

"எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்ற தமிழ் நாட்டுப் பழமொழிக்கு முன்னொரு தடவை நீர் விளக்கம் சொன்னது எனக்கு நினைவிருக்கு. இப்பொழுது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பாதுகாப்புச் செயலருமான கொத்தபாய ராஜபக்ஷ இந்தப் பழமொழிக் கிணங்க சரியாகச் செயற்பட்டு மாட்டிக்கொண்டிருக்கிறார் என்று சொல்லிக்கொண்டு வந்தமர்ந்தார் நண்பர் பரதேசியார்.

நீர் எதைப்பற்றிச் சொல்கிறீர் என்று நான் கேட்க மாட்டேன். ஆனால், நீர் சொல்வதை விளக்கமாகச் சொல்லும் என்று மட்டும் கேட்பேன் என்று கேட்டேன்.

இதற்குப் பாதுகாப்புச் செயலர் கொத்தபாய ராஜபக்ஷ இருவாரங்களுக்கு முன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவராக அந்த நேரம் கடமையாற்றிய ஹொக்லண்ட் அவர்களிடம் என்ன சொல்லியிருந்தார் என்பதை மீண்டும் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது என்று நண்பர் பரதேசியார் தொடர்ந்தார்.

துணைப்படைகளாகச் செயற்படும் ஆயுதக்குழுக்கள் அரசப் படைகளுடன் சேர்ந்து இயங்குகின்றன என்று செய்திகளும், தகவல்களும் வெளிவந்து கொண்டிருந்தன. ஒரு பத்திரிகையில்கூட படங்களுடன் இந்த ஆயுதக்குழுக்கள் பற்றிய செய்தி வெளிவந்திருந்தது. இதுபற்றிக் கேட்டபொழுது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இருவாரங்களுக்கு முன் மறுப்புத் தெரிவித்திருந்தார். அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுக்களான துணைப்படைகள் இயங்கவில்லை என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய சொல்லியிருந்தார். இன்று சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரிடம், துணைப் படையான கருணா குழுவின் உதவியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சுலபமாகத் தோற்கடிக்க முடியும் என்று கூறியிருக்கிறார். இதை "டெய்லிமிறர்" பத்திரிகை வெளியிட்டிருக்கிறது என்று பரதேசியார் சொன்னார்.

படைத்தளபதிகள், அமைச்சர்கள் எனஅரச தரப்பில் எல்லோருமே ஆயுதக் குழுக்களுக்கும், அரச படைகளுக்கும், அரசுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று கூறிவந்தனர். கருணா குழுவுக்கும், அரச படைகளுக்கும் தொடர்பில்லையென்றும் இவர்கள் கூறிவந்தனர். இதில் இன்னொருவேடிக்கை சமீபத்தில் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத்தினசரியொன்று கருணா குழுவைச் சேர்ந்தவர் என்று ஒருவரைப் பேட்டி கண்டு வெளியிட்டிருந்தது. இவரும் இந்தப் பேட்டியில் தங்களுக்கும், அரசுக்கும், அரச படைகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்றும் - தாங்கள் தனியாக சுதந்திரமாக இயங்கி வருவதாகவும் தெரிவித்திருந்தார்.

மொத்தத்தில் அரச தரப்பினரும், படைத்தரப்பினரும் கோடரிக்காம்புத் தரப்பும் ஒற்றுமையாகக் கூட்டுச் சேர்ந்து இங்குள்ள மக்களை மட்டுமல்ல - இங்கு சமாதானத்தை உருவாக்க உதவிக்கு வந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், அனுசரணையாளர்களையும் மட்டுமல்ல - உலக நாடுகளையும் கூட் முட்டாள்களாகக் கருதி செயற்பட்டுவருகின்றனர் என்று நான் சொன்னேன்.

விடுதலைப் புலிகள் சமாதானத்துக்காக உண்மையாக நடந்து கொள்ளவில்லையென்றும் - அவர்கள் ஒரு போதும் சமாதானத்தில் நம்பிக்கை வைத்துச் செயற்படுவதில்லையென்றும், இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர்தான் ஒரே தமிழ் அமைச்சர் ஓர் ஆங்கிலப் பத்திரிகைக்குப் பேட்டியளித்தபோது - புலிகள் மீது குற்றம் சுமத்தியிருந்தார். இதே அமைச்சர்தான் கோடரிக்காம்பு கூட்டிலிருந்து வெளிக்கிட்டபோது, அதனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஜனநாயகப் பாதைக்கு வழி சொல்லிக் கொடுத்ததாகத் தெரிவித்தார்.

கோடரிக் காம்புடன் சமாதானப்பேச்சு நடத்த வேண்டுமென்றும், இவர் அந்தச் சமயம் யோசனை சொல்லியிருந்தார். இப்பொழுது விடுதலைப் புலிகளுக்குச் சமாதானத்தில் உண்மையான நாட்டமில்லையென்றும் இந்தத் தமிழ் அமைச்சர் கூறியிருக்கிறார் என்று பரதேசியார் சொன்னார்.

இந்த அமைச்சர்,படைத்தரப்பினர் மட்டுமல்ல - நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணிப்பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ள பொலிஸ்மா அதிபர் நாக்கூசாமல் துணைப் படைகள் எங்கே இருக்கின்றன. இவைகளைப்பற்றி தகவல் தெரிந்தவர்கள் தமக்குத் தெரிவித்தால் தாம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறாரென்றால் எப்படி எல்லோரும் கூட்டுச் சேர்ந்து ஒரு ஆயுதக்குழுவைப் பராமரித்து வந்திருக்கிறார்கள் என்று இப்பொழுது உலகத்துக்கத் தெரிந்திருக்குமே என்று நான் சொன்னேன்.

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் கருணா எப்படி கோடரிக்காம்பாக உருவானது, இதை எப்படிக் காப்பாற்றிக் கொண்டு வந்தது, அதற்கு யார்யார் உதவி செய்தது என்ற இரகசியங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலின் நெருங்கிய சகாவான மிலிந்த மொறகொட, மற்றும் நண்பரான நவீன் திஸநாயக்கா போன்றவர்களால் அம்பலத்துக்கு வந்தது. இதன் விளைவாக ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கா தோல்வியைத் தழுவ நேர்ந்தது. தங்களுடைய கெட்டித்தனத்தை வெளியிடுவதாக நினைத்து ரணில் விக்கிரமசிங்காவுக்குக் கெடுதியைத் தேடிக் கொடுத்தனர். இப்பொழுது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உடன்பிறப்பே அவரிளன் அரசுக்குக் கெட்ட பெயரைத் தேடிக்கொடுக்கத் துணிந்திருக்கிறார் என்று பரதேசியார் சொன்னார்.

விடுதலைப் புலிகளுடன் நோர்வே மூலம் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக இருப்பதாகவும், இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து புதிய ஒப்பந்தம் உருவாக்கப்பட வேண்டுமென்று சிலர் குரல் கொடுக்கின்றனர். இன்னும் சிலர் போர்நிறுத்த ஒப்பந்தம் மாற்றியமைக்கப்படவேண்டும். இந்த ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும் குரல் கொடுத்து வருகின்றனர். இதே சமயம் நோர்வேயை அனுப்ப வேண்டும் என்று ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் குரல் கொடுத்து வருகின்றன என்று நான் சொன்னேன்.

ஜெனிவா மாநாட்டுக்குப்பின் துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டுமென்ற முடிவுக்குப்பின் துணைப் படைகளின் நடமாட்டம் கிழக்கு மாகாணத்தில் ஆயுதப்படைகளின் உதவியுடன் அதிகரித்திருக்கிறது. இப்பொழுது இந்தக் குழுக்கள் தங்களை அரசியல் கட்சிகளாகக் காட்டிக்கொண்டு - அலுவலகங் களையும் படைகளின் உதவியுடனும் அங்கீகாரத்துடனும் திறக்கத் தொடங்கியிருக்கின்றன. இப்போதுள்ள நிலையில் ஆயுதக் குழுக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேரடி மோதல் ஏற்படுவதற்குப் படையினரும் அரசும் வழி வகுப்பதாகவே தோன்றுகிறது என்று பரதேசியார் சொன்னார்.

கருணாகுழுவுடன் இராணுவம் சேர்ந்தால் விடுதலைப் புலிகளை சுலபமாகத் தோற்கடித்துவிடலாமென்று இருவாரங்களுக்கு முன் நடந்த சந்திப்பின் போது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ முன்னாள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹொக்லண்டிடம் தெரிவித்ததாகவும், இதேசமயம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதக்குழுக்கள் இல்லையென்று மறுத்திருந்ததும் கண்காணிப்புக்குழுவுக்குக் கோபத்தை ஏற்படுத்தியிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன என்று சொன்னேன்.

எல்லாம் சரிதான். இலங்கையில் எதிர்க்கட்சியும் சரி, ஆளும் தரப்பும் சரி மொத்தத்தில் சிங்கள ஜனநாயகம். தமிழ் மக்களுக்கும், அவர்களின் பாதுகாவலராக இன்று விளங்கும் விடுதலைப் புலிகளுக்குமெதிராக எப்படிச் சதி வேலைகளைச் செய்து வருகிறதென்பதை உலகம் உணர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளித்தவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று சொல்லிக் கொண்டு பரதேசியார் நடந்தார்.

# பிரிவினைக் கிளர்ச்சி தோன்ற காரணமானவர்கள் சிங்களவர்களே!



*1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற இனக்கலவரத்தின் போது, வடக்கு - கிழக்கு பகுதி நோக்கி அகதிகளாகத் துரத்தப்பட்ட தமிழர்கள்.*

1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் சிங்கள மக்களுக்கு தன்னாட்சி அதிகாரம் கிடைத்தாலும் தமிழ் - முஸ்லிம் மக்கள் அந்த அரசிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களது மொழி,

> *'இனப்பிரச்சினை சிக்கல் மற்றும் இலங்கைக்கு பொருந்தக்கூடிய நிர்வாக முறை' என்ற தலைப்பில் குருநாகல் மனித உரிமைகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் சட்டத் தரணி எஸ்.ஜி.புஞ்சிஹேவா ஆற்றிய உரையின் தமிழாக்கம்.*

மதம், பண்பாடு என்பன அந்த அரசினுள்ளே நிரூபணமாகவில்லை. அது சிங்கள ஆதிபத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒற்றையாட்சியானது.

இந்த நிலைமையால்தான் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையை கோரமுற்பட்டனர். ஆனால், 1948 இல் சுதந்திரம் கிடைத்த பின்பு ஒரு இனத்தை முக்கியப்படுத்தாமல், இந்தியாவைப் போல சமமான அரசொன்றை கட்டியெழுப்பியிருந்தால் இது போன்ற பிரிவினைவாத கிளர்ச்சி தோன்ற இடமிருந்திருக்காது.

எந்தவொரு இனம் மற்றும் மதத்துக்கு விசேட வேறுபாடுகள் அல்லது சிறப்புரிமைகள் வழங்கும் விதமான சட்டம் தயாரிக்கப்படக் கூடாதென 1947 சோல்பரி அரசியலமைப்பின் 29.1 சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மூலம் அந்த அரசியலமைப்பை தயாரித்தவர்கள் எதிர்பார்த்தது பிரதான இனத்தின் நெருக்கடிக்குட்படாத விதமாக சிறுபான்மை இனத்தவர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதே.

ஆனால், 1972 இல் முதலாவது மக்கள் குடியரசு அரசியலமைப்பின் மூலம் அந்த சரத்து நீக்கப்பட்டது. ஒருமொழி இருநாடுகள், மொழிகள் இரண்டு நாடு ஒன்றென 1950 களில் கூறிய கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவினாலேயே இந்த அரசியலமைப்பு தயப்பட்டது விதியின் செயலாகும்.

இதில் பௌத்த மதத்துக்கும் விசேட இடம் வழங்கப்பட்டதோடு, இந்த அரசியலமைப்பின் மூலம் இலங்கை அரசு - சிங்கள மொழிக்கும் விசேட இடம் வழங்கியதுடன் சிங்கள - பௌத்த அரசாக அது ஆக்கப்பட்டது. இதன் மூலம் சிறுபான்மையின மக்கள் அரசியலிலிருந்து மேலும் வெளியே தள்ளப்பட்டனர்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டாலும், வேண்டிய எந்த ஒரு வேளையிலும் அதனை மீண்டும் ஜனாதிபதி பெற்றுக் கொள்வதற்கு இயலுமான வகையில் அந்தச்சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் அதிகாரத்தை பங்கிடும் போது அதனைப் பறித்துக் கொள்வதற்கு சட்டம் தயாரிக்கப்படக் கூடாது.

ஒற்றையாட்சியின் பொருட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட வேண்டுமென சட்டத்தை கொண்டு வந்ததன் மூலம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்திலிருந்து துரத்தியடித்ததன் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு பெரும் பலத்தை ஏற்படுத்தும் வேலைத் திட்டத்தை சிங்கள அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உதவி செய்தமைக்காக சிங்கள அரசாங்கத்துக்கு மிகப் பெரியளவில் நன்றி கூற வேண்டும். இதுவரையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி இரண்டும் அரச மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், தமிழ் மொழியை நடை முறைப்படுத்துவதற்கு எந்த விதவசதிகளும் செய்யப்படவில்லை.

வடக்கு- கிழக்கு பிரதேசங்கள் தமிழர்களின் தாய்நாடு என்ற எண்ணக்கரு சிங்களத் தலைவர்களினாலேயே ஏற்படுத்தப்பட்டது. 1958தொடக்கம் தெற்கில் ஏற்பட்ட இனவாத கலவரங்களின் பின்னர் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு என்ற விதமாக அவர்களை வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு அனுப்பியதன் மூலம் தமக்கு அந்தப் பிரதேசங்களில் மட்டுமே பாதுகாப்புள்ளதென தமிழர்கள் சந்தேகமின்றி விளங்கிக் கொண்டனர்.

சுனாமி ஏற்பட்ட சந்தர்ப்பத்திலும் கூட சமாதான வழியில் செல்வதற்கு இடமிருந்தது. ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

எதிர்வரும் காலத்தில் விடுதலைப் புலிகள் - சிங்கள இளைஞர்களை பயன்படுத்தி இராணுவத்தை அமைப்பதற்குத் திட்டமிடுவதாகத் தெரியவருகிறது. இந்தியாவில் தேசிய கீதம் வங்காள மொழியிலேயே இசைக்கப்படுகிறது. அங்கு ஆறு வீதமான வங்காள இனத்தவர்களே வாழ்கின்றனர். ஆனால், இந்தியாவின் அனைத்து இனங்களின், மதங்களின் சமனான தன்மை பற்றி அதில் வெளியிடப் படு கின்றது. எனவே, அனைத்து இந்தியர்களும் அந்த தேசிய கீதத்துக்கு மதிப்பளிக்கின்றனர்.

இந்தியாவின் தேசியக்கொடியிலும் அனைத்து இன மதத்தவர்களின் தன்மை உறுதியாகின்றது.

இலங்கைக்கு முதலில் சமஷ்டி முறையை தமிழ்த் தலைவர்கள் பிரேரிக்கவில்லை. 1927ஆம் ஆண்டு சிங்களத் தலைவர்களே அதனை பிரேரித்தனர். மலைநாட்டுத் தலைவர்களால் - மலைநாடு, கீழ் நாடு சிங்களவர்களுக்கும் வடக்கு, கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களுக்குமென மூன்று இராஜ்ஜியங்கள் கோரப்பட்டன.

இன்று உலக நாடுகளில் 40வீதமானவை சமஷ்டி முறையிலும், 25வீதமானவை சமஷ்டி முறைக்குச் சென்றுகொண்டுமிருக் கின்றன. உலக சனத்தொகையில் 60வீதமானோர் சமஷ்டி அரசுகளின் பிரஜைகளாவர்.

இலங்கை அரசு ஊடகங்களைப் பயன்படுத்தி சமஷ்டி முறை குறித்து மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு முயற்சி எடுப்பதில்லை. பேச்சுவார்த்தைக்காக தகுதியான, பிரச்சினைகள் பற்றி ஆழமான புரிந்துணர்வு உள்ளவர்களைத் தொடர்புபடுத்துவதில்லை. நியமிக்கப்பட்டவர்கள் செய்வது பேச்சுவார்த்தையை மேலும் சிக்கலாக்குவதே.

உலகின் பல நாடுகளிலிருந்து எமக்கு சமஷ்டி முறை குறித்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஸ்பெயின் மற்றும் பெல்ஜியம் ஆகிய நீண்டகாலம் ஒற்றையாட்சி நிலவி சமஷ்டி முறைக்கு மாறிய அரசுகளிடமிருந்தும் அனுபவங்களைப் பெறலாம்.

இலங்கைப் பிரஜைகளை, இந்தியப் பிரஜைகள் போன்று நினைப்பதற்கு ஆரம்பித்தால் மாத்திரமே, இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வைப்பெற்றுக் கொள்ள முடியும். முஸ்லிம் இனத்தவர் ஒருவரை ஜனாதிபதி ஆக்குவதற்கும், சீக்கியர் ஒருவரை பிரதமராக்குவதற்கும், வங்காள மொழியில் பாடப்படுகின்ற தேசிய கீதத்துக்கு அனைவரும் எழுந்து நின்று மதிப்பளிக்கின்ற இந்தியர்களைப் போன்று நாம் நடவடிக்கை எடுத்தால் மாத்திரமே, இந்த தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

*தமிழில் நாபோடி*

## வியய புது வருடம் உங்களுக்கு எப்படி?

## மிதுன ராசி

**மிருகசீரிடம் 3,4 கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 கால்கள்.**



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு ஏழரைச் சனி கடைக்கூறு நடைபெற்றாலும், ஆண்டளப் பவனாகிய குரு பகவான் 5-ஆம் வீட்டிலிருந்து மிதுன ராசியை நோக்குவதால், வருட ஆரம்பம் முதல் ஐப்பசி வரை ஏற்றமான பலன்கள் நடைபெறும். கடந்த காலங்களில் இருந்த சோர்வுகள் நீங்கும். புத்துணர்ச்சியோடு கருமமாற்ற முடியும். உத்தியோக நிலையில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்,சிலருக்கு வழக்குகள் மூலம் தேவையற்ற பிரச்சினைகள் உண்டாகும். சில அலைச்சல்கள் ஏற்பட்டாலும் சமாளிக்கக் கூடியதாக இருக்கும்.

ஏழரைச் சனி சில சிக்கல்களைத் தோற்றுவிக்கும். பிரயாணங்களைக் குறைப்பது நன்று. எடுத்த கருமங்கள் ஆரம்பத்தில் தடைப்பட்டாலும் இறுதியில் வெற்றியளிக்கும். உறவினர் நண்பர்களின் உதவி கிடைக்கும். பொறுமையைக் கடைப்பிடித்தல் பல வகையாலும் நன்று. சிலருக்கு புத்திரபாக்கியம் கிடைக்கக் கூடியதாக இருக்கும். திருமணம் போன்ற சுபகருமங்கள் சிறப்பாக நடக்கும்.

28.10.2006 ஆம் ஆண்டில் குரு பகவான் 6 ஆம் வீட்டில் சஞ்சரிக்கத் தொடங்குவதால் பல சோதனைகள் ஏற்பட இடமுண்டு. மனம் ஒரு நிலையில் நில்லாது. எந்தக் கருமத்தையும் எப்படிச் செய்வது என்ற குழப்பம் ஏற்படும். உடல் நலமும் இடையிடையே பாதிப்படையும். உற்றார் உறவினர்களிடையே மனத்தாங்கல்கள் ஏற்படலாகும். 01.11.2006 முதல் 10.01.2007 வரை சனி அதி சஞ்சாரமாக சிங்கராசிக்குச் செல்வதால் இந்தக் காலத்தில் அனுகூலமான பலன்களைக் காணலாம். உடல் நலக் கோளாறுகள் படிப்படியாகக் குறையும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. பெரிய தொகைகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் நன்று. சனி, வியாழனுக்கு வழிபாடு செய்தல் நன்மை தரும்.

உத்தியோகத்தர்களுக்கு ஏழரைச் சனி பிற்பகுதி நடைபெற்றாலும், குரு பகவானின் அனுக்கிரகத்தால் நற்பலன்களே நிகழும். முன்பிருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். சிலருக்கு தேவை யற்ற பிரச்சினைகள் தவிர்க்க முடியாமலிருக்கும். வசதியான இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். வியாழமாற்றத்தின் மேல் ஊழியர். உயர் அதிகாரிகளின் எதிர்ப்புகள் ஏற்படலாம். பணிந்து போவது நன்று. வேலைப்பளுவும் அதிகமாகவே இருக்கும்.

வர்த்தகர்களுக்கு பல வகையாலும் சிறப்புகள் உண்டு. வெளிநாட்டுப் பொருட்கள் தாராளமாக விற்பனையாகும். சிலருக்கு தொழில் சம்பந்தமான பிரயாணங்கள் ஏற்படலாகும். தொழில்துறையில் எதிர்பாராத முன்னேற்றம் கிடைக்கும். வங்கி நிலை சிறப்பாக இருக்கும். பல அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த முடியும். லாபம் அதிகரிக்கும். போட்டி, பொறாமைகள் குறையும். உடன் தொழில் செய்பவர்களையும், வேலையாட்களையும் அனுசரித்துப் போகவேண்டும். 28.10.2006 முதல் கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. வியாபாரத்தில் லாபம் இருந்தாலும்,பிரயாசை கூடுதலாகும். வருடப் பிற்பகுதியில் போட்டி பொறாமை கூடும்.

பெண்களுக்கு வருடத் தொடக்கத்தில் உடல் நலம் சிறப்பாக இருக்கும். மனச்சந்தோஷம் உண்டாகும். புத்திரர்களால் சிறப்புகள் உண்டாகும். மங்கள கருமங்கள் நடைபெறும். உறவினர்களின் ஆதரவும் கிடைக்கும். பிரயாணங்கள் நன்மை தருவதாக அமையும். வியாழ மாற்றத்தின் மேல் அதாவது 28.10.2006 இன் மேல் சுபமுயற்சிகளுக்கு தடை உண்டாகும். உறவினர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படும்.

மாணவர்களுக்கு வருட ஆரம்பம் சிறப்பாக இருக்கும். கல்வியில் சிறப்பாக வெற்றியடைய முடியும். விளையாட்டுகளிலும் பரிசுகள் கிடைக்கும். உயர்கல்விகள் அனுகூலமாக அமையும். விளையாட்டுக்களில் சாதனை படைக்க முடியும். பிற்பகுதியில் கல்வியில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். முயற்சிக்கேற்ப வெற்றி கிட்டும்.

(தொடரும்...) **சி.சிதம்பரநாதக் குருக்கள்**

## வாசகர் கடிதம்

# தேவையற்று ஒளிரவிடப்படும் மின் குமிழ்கள்

தினமும் இரவில் 7 மணி முதல் 9 மணிவரை தேவையற்று ஒளிரவிடப்படும் மின்குமிழ்களில் ஆகக் குறைந்தது இரண்டையாவது நிறுத்தி வைத்தால், குடாநாட்டுக்கான மின்விநியோகத்தில் சுமார் 4 மெகாவாட்ஸ் அளவை மீதப்படுத்த முடியும் எனவும் இதன் மூலம் குடாநாட்டுக்கான மின்வெட்டைத் தவிர்க்கலாம் எனவும் மின்சாரசபை அதிகாரியொருவர் அண்மையில் தெரிவித்திருந்ததாக பத்திரிகைச் செய்தி மூலம் அறிந்து கொண்டோம். இது உண்மையாக இருக்கலாம்.

ஆனால், இதைவிட சுலபமான இன்னொருவழியும் உண்டு. தென்மராட்சிப் பகுதியில் பல இடங்களுக்கு இன்னமும் மின்மானி பொருத்தப்படாமல் எழுந்தமானத்துக்கு கட்டணம் அறவிடப்படுகிறது. இதனால் மின்மானி பொருத்தப்படாத அனைவரும் தத்தமது வீடுகளில் அதிவலுக்கூடிய மின் குமிழ்களைப் பயன்படுத்துவதோடு, வீடுகளில் உள்ள அத்தனை மின்குமிழ்களையும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை எரிய விடுகின்றனர்.

அது மட்டுமன்றி (வசதியுள்ளோர் மின் உபகரணங்களைத் தேவைக்கு மேலதிகமாகப் பயன்படுத்துகின்றனர்) இதனால் பெருமளவு மின்சாரம் வீணடிக்கப்படுகிறது.

இதனைத் தவிர்த்து அனைவரும் மின்மானிகள் பொருத்தப்பட்டால், தேவைக்கு மேலதிகமாக எவரும் மின்சாரத்தைப் பயன்படுத்த மாட் டார்கள். மேலும் இங்கு திருட்டு மின்சாரம் பெறுவோர் தொகையும் அதிகரித்துக் காணப்படுகிறது. இரவில் மட்டுமல்லாது பகலிலும் கூட திருட்டு மின்சாரம் பெறப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதனைத் தடுப்பதற்கும் அனைவருக்கும் விரைவில் மின்மானி பொருத்தப்பட்டால், எதிர்பார்க்கும் அளவைவிட அதாவது இரண்டு மின் குமிழ்களை நிறுத்திவைப்பதைவிட மேலதிக மின்சாரத்தைச் சேமிக்க முடியும். செய்யத் துணிவார்களா அதிகாரிகள்?

அல்லது மின்மானிவரவில்லை, தொழிலாளர் பற்றாக்குறை என்று வெறுமனே சாட்டுப்போக்குச் சொல்லி அறிக்கை விட்டுக்கொண்டு இருக்கப் போகிறார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

**மின்மானி பொருத்தப்படாததால் அதிக கட்டணம் செலுத்தி பாதிக்கப்பட்ட ஒருவன் - சாவகச்சேரி**

# மாமனிதர் விக்னேஸ்வரனின் இறுதி நிகழ்விலிருந்து







## மாணவர் பேரவைக்குள் அத்துமீறியமை அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல்

### தமிழ் மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் மாணவர்களுக்கான உதவிகளைப் புரிந்துவரும் தொண்டு நிறுவனமான சர்வதேச தமிழ் மாணவர் பேரவைக்குள் அத்துமீறி நுழைந்த படையினரின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறோம் என யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களின் சர்வதேச தமிழ் மாணவர் பேரவை அலுவலகத்தினுள் நேற்று முன்தினம் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் அங்கு வைக்கப்பட்டிருந்த அன்னை பூபதியின் திருவுருவப் படத்தை அபகரித்துச் சென்றதுடன், பேரவையின் முன்பாக திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ. விக்னேஸ்வரனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகக் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் அகற்றப்பட்டமை மற்றும் மாணவர் பேரவையில் நிற்கும் மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களின் நலனுக்காக ஏனைய சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து தனது செயற்பாட்டை முன்னெடுத்துவரும் மாணவர் பேரவைக்குள் ஆயுதங்களுடன் படையினர் அத்துமீறி நுழைந்தமையும், உத்தியோகத்தர்களையும், அங்கு தங்கி நின்று கல்வி கற்று வரும் வறிய மாணவர்களையும் அச்சுறுத்தியமையும் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல்.

எனவே இவ்வாறான சம்பவங்கள் இனிவரும் காலங்களில் இடம்பெறா வண்ணம் படைத்தரப்பினர் கவனமாகச் செயற்பட வேண்டும். இந்தச் செயற்பாடானது சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களுக்கு விடப்பட்ட சவாலாகவே நாம் கருதுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கியூடெக் பணியாளர்களுக்கு பெருமளவானோர் அஞ்சலி

சுதுமலை—

மிருசுவில் பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் பலியான கரித்தாஸ் - கியூடெக் மனிதநேய அமைப்பின் பணியாளர்களின் அஞ்சலி நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை 2 மணியளவில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனப் பணிமனையில் நடைபெற்றது.

அமரர்களான கந்தபத்மநாபன் சண்முகரட்ணம், செல்வேந்திரா - பிரதீப்குமார் ஆகியோருக்கான அஞ்சலி நிகழ்வில் - நிறுவன இயக்குநரால் நிறுவனக்கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மனித உரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி, சர்வதேச நிறுவனப் பிரதிநிதிகள், அரச - அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், கிளிநொச்சி கரித்தாஸ் - கியூடெக் நிறுவனப் பணியாளர்கள், ஊர்காவற்துறை கிறிஸ்து இல்ல மாணவர்கள் , இயக்குநர், கிராம மட்ட குழுப் பிரதிநிதிகள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், நிறுவனப் பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலிகளைச் செலுத்தினர். அஞ்சலி உரைகளை நிறுவன இக்குநர், சர்வதேச பிரதிநிதிகள் நிகழ்த்தினர். (91)

## நெற் காணிகளை இடாப்பில் பதிவுசெய்ய நடவடிக்கை

கோப்பாய்—

உரும்பிராய் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நெற்காணிகளை இடாப்பில் பதிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, விவசாயிகள் தமது பகுதியிலுள்ள விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி காணி உறுதி அல்லது குத்தகைக் காணி உரிமைக் கடிதம் ஆகியவற்றின் நிழற்பிரதியையும் இணைத்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டுமென உரும்பிராய் கமநல சேவை நிலைய அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை - கோப்பாய் மத்தி விவசாய சம்மேளனத்தின் எல்லைப் பிரிவிலுள்ள நெற்காணிகளையும் இடாப்பில் பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே கோப்பாய் மத்திப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் - விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கோப்பாய் மத்தி விவசாய சம்மேளனத் தலைவர் அறிவித்துள்ளார்.

## செயற்திறன் அரங்க இயக்கம் நடத்தும் கருத்தரங்கும், நாடக அரங்கேற்றமும்

யாழ்ப்பாணம்—

செயற்திறன் அரங்க இயக்கம் வாழும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கக் கருத்தரங்கும், நாடக அரங்கேற்றமும் மூன்றாவது அமர்வு இன்று காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - அறிமுகவுரையை சிறிஸ்கந்தராஜா, சிறப்புரையை தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலாநிதி குழந்தை சண்முகலிங்கம் சிறுவர் அரங்கு ஊடாக நாடக எழுத்துரு படைப்பகம் என்ற தலைப்பிலும், சிறுவர் நாடகத் தயாரிப்பு என்ற தலைப்பில் தே. தேவானந்தும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இரண்டாம் நாள் முத்தமிழ்விழா

யாழ்ப்பாணம்—

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முத்தமிழ்விழா இரண்டாம் நாள் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மன்றத் தலைவர் கு. உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலாநிதி வே. சுப்பிரமணியம் (முல்லைமணி), ஓய்வுபெற்ற ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் பொன். தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாழ்த்துரையை மன்றக் காப்பாளர் செல்வி வி. கந்தசாமிஐயர், சிரேஷ்ட விரிவுரையாளர் வே. கணபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை வரலாற்றில் வைகறை எனும் பத்திரிகையும், கிராமியப் பாடல் ஒலிப்பேழையும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்களால் பாடப்பட்ட பாடல் ஒலிப்பேழையும் வெளியிடப்பட்டது.

பத்திரிகை வெளியீட்டுரையை எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் நிகழ்த்தினார். அதனைத்தொடர்ந்து தனி நிகழ்வுகளில் பங்குகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர். ஏனைய நிகழ்ச்சியில் பங்குகொண்டோருக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## ஆசிரிய கலாசாலைக்கு அனுமதிக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம்—

2006 ஆம் ஆண்டுக்கான ஆசிரிய கலாசாலை அனுமதிக்கான விண்ணப்பம் கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாமென அறியத் தருவதுடன், அதற்கான விண்ணப்பத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என ஆசிரிய கலாசாலை அதிபர் தெரிவித்தார்.

இந்த அனுமதிக்காக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பகுதிநேர விரிவுரையாளர் தேவை

முகாமைத்துவக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் G.A.Q. கற்கைநெறியில் பின்வரும் பாடங்களை சனி, ஞாயிறு தினங்களில் பகுதி நேரமாகக் கற்பிக்கக் கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

பாடம் -

- புவியியல்
- முகாமைத்துவம்

தகைமைகள் -

- ◎ புவியியல் பாடத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் புவியியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
- ◎ முகாமைத்துவ பாடத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முகாமைத்துவத் துறையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
- ◎ மேற்படி தகைமையுடையோர் 15.04.06 - 16.04.06 தினங்களில் காலை 9.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

இணைப்பாளர்,
இல 139, மீனாட்சி அம்மன் கோவிலடி,
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

(C/4467)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கருணாகுழுவுடன் இணைந்து புலிகளைத் தோற்கடிக்கலாம்!

## கோத்தபாயவின் கருத்துக்கு கண்காணிப்புக்குழு விசனம்

கொழும்பு—

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் எந்தவொரு துணை ஆயுதக்குழுவும் இல்லையென்று கூறிக்கொண்டு - கருணா குழு இராணுவத்துடன் இணைந்தால் விடுதலைப் புலிகளை சுலபமாகத் தோற்கடித்துவிடலாம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துத் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விசனமடைந்திருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்டுடனான சந்திப்பின்போதே கோத்தபாய ராஜபக்ஷ மேற்படி கருத்தை வெளியிட்டிருந்தார்.

இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தச் சந்திப்பை அடுத்து தற்போது இருதரப்புக்கும் இடையில் சொற்போர் நடைபெற்றுவருகிறது.

விடுதலைப் புலிகளை சுதந்திர வீரர்கள் என கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் ஹொக்லன்ட் வர்ணித்ததாக வெளிவந்த செய்திகளை அடுத்தே இந்தச் சொற்போர் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழு தெரிவிக்கையில் -

கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் கடந்த நான்கு வருடங்களாக இலங்கையில் பணிபுரிந்திருப்பதால் இலங்கையின் அரசியல் நிலைமையை நன்குணர்ந்தவராகவே செயற்பட்டிருக்கிறார். எதிர்கால விளைவுகளை கருத்திற்கொண்டே அவரது வார்த்தைப் பிரயோகங்கள் இதுவரை இருந்துள்ளது.

இவ்வாறான நிலையில் பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் எதுவித அடிப்படையுமற்ற வீணான வதந்திகளையும், குற்றச்சாட்டுக்களையும் பிரசாரம் செய்வதானது கண்காணிப்புக்குழுவின் பணிக்கு மிகவும் பாதிப்பையே ஏற்படுத்தும் எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை - எந்தத் துணைப் படையும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லையெனக் கூறிக்கொண்டு, கருணா குழு இராணுவத்துடன் இணையும் பட்சத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பது சுலபம் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தச் சந்திப்பின்போது தெரிவித்திருந்த கருத்தை கண்காணிப்புக்குழு வன்மையாகக் கண்டித்திருப்பதாகத் தெரியவருகிறது.

# தமிழ் இளைஞர்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல்!

## மூவர் படுகாயம்

திருகோணமலை—

திருகோணமலை - வரோதய நகரில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தமிழ் இளைஞர்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. நேற்றிரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அன்புவழிபுரத்தில் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் விக்னேஸ்வரனின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டுவிட்டு வரோதய நகரிலுள்ள தமது வீடுகளுக்கு திரும்பிக்கொண்டிருந்த போதே இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் அந்தோனிப்பிள்ளை மரியநேசன் (வயது 24) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில்- திருகோணமலை பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

மற்றைய இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் விபத்து சேவைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். (10) (4)

# உயர்பாதுகாப்பு வலய பகுதிக்குள் அரசசார்பற்ற நிறுவனத்துக்கு தடை

யாழ்ப்பாணம் —

உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் செல்வதற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், வாகனங்களும் செல்ல படையினர் தடைவிதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசமான புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு நேற்றுக் காலை சென்ற அரச பிரதிநிதிகளின் வாகனமும், கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்ற தொண்டர் நிறுவனம் ஒன்றின் வாகனமும் படையினரால் தடுத்துநிறுத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

புன்னாலைக்கட்டுவனிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தொண்டுநிறுவனம் ஒன்று கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

படையினரின் இத்தகைய செயற்பாட்டால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

மிருசுவிலில் படையினரின் வாகனம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலை அடுத்தே படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் தீவிரமடையும் படையினரின் கெடுபிடிகள்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் பொதுமக்கள் மீதான படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதுடன், ரோந்து நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

நேற்றுமுன்தினம் மிருசுவில் பகுதியில் படையினர் வாகனம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலை அடுத்தே படையினர் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், பயணிகளும் உடல் சோதனைக்குள்ளாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தோர் படையினரால் வழிமறிக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டதுடன் மோட்டார் சைக்கிளின் பாகங்களும் கழற்றப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.நகர், சாவகச்சேரி, புன்னாலைக்கட்டுவன், வடமராட்சி, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டது. இதனால் பொதுமக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## திருமலையில் கிளைமோர்...

மேலும் தெரியவருவதாவது -

திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து 20 பேருடன் கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த கடற்படையினரின் பஸ்மீது திருகோணமலை - ஹபரணை வீதியில் 98 ஆம் கட்டைப் பகுதியில் வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் பஸ் சாரதி உட்பட 12 கடற்படையினர் உடல் சிதறிப் பலியாகினர். 9 கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த 9 பேரும் உடனடியாக அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் ஹெலி மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

கிளைமோர் தாக்குதலில் சேதமுற்ற பஸ் மீது தனியார் வாகனம் ஒன்று மோதியதில் அதில் பயணித்த இங்கிலாந்து பிரஜைகளான வில்லியம்ஸ்சன் கிரின்பீஸ், லின்ஸி ஆஸ் ஆகிய இருவரும் காயமடைந்த னர். இவர்கள் இருவரும் ஹெலிகொப் டர் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை கடற்படையினர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து திருகோணமலை நகரில் சிங்கள இளைஞர்கள் வெள்ளைக் கொடிகளைக் கட்டி இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் - வீதிகளில் நடமாடிய தமிழ்மக்களை கடுமையாகத் தாக்கியதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட கிளைமோர் குண்டு பிளாஸ்ரிக் பொருளால் தயாரிக்கப்பட்டது என்றும் கிளைமோருக்குள் ஐநூறுக்கு மேற்பட்ட இரும்புச் சன்னங்கள் இருந்ததாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ஊர்காவல் படையினரின் பதுங்குகுழி ஒன்றும் இருந்ததாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை - இந்தத் தாக்குதல் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க குற்றம் சாட்டினார்.

தாக்குதல் சம்பவத்துக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்தார்.

இத்தகைய தாக்குதல்கள் தொடரும் நிலையில் ஜெனிவா பேச்சுக்கள் நடைபெறுவது சந்தேகமே என இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் கருத்துத் தெரிவித்தார். (10)

## நோர்வே...

தெரிவித்துள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகும் ஜெனிவா பேச்சுக்களில் இரு தரப்பினரும் பங்குபற்றவேண்டும் என்றும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இருதரப்பிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தப் பேச்சுக்களின்போது போர்நிறுத்த உடன்பாட்டையும், இதற்கு முன்பு எட்டப்பட்ட இணக்கப்பாடுகளையும் பாதுகாப்பது தொடர்பான வழிமுறைகளை கண்டறிய முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## கண்காணிப்...

கிளைமோர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

திருகோணமலை கிளைமோர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அங்குள்ள எமது அதிகாரிகளிடமிருந்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அவர்களின் தகவல்கள் கிடைத்த பின்னரே சம்பவம் தொடர்பாக கருத்துக்களைத் தெரிவிக்க முடியுமெனத் தெரிவித்த அவர் - அங்குள்ள எமது அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

## கண்காணிப்புக்குழு புதிய...

இன்று கிளிநொச்சிக்கு செல்லும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோரைச் சந்தித்து பேசுவார்.

அத்துடன், திருகோணமலையில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலை யார் நடத்தினர் எனத் தெரியவில்லையென்றும், அது தொடர்பான விசாரணை இடம்பெற்று வருவதாகவும், இந்தத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக கண்காணிப்புக்குழு பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டோட்ரயர் தெரிவித்தார்.

அதேவேளை, அண்மைக்காலத்தில் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது - படைத்தரப்பு பதில் தாக்குதல்களை நடத்தாமையானது அரசாங்கம் போர்நிறுத்த உடன்பாட்டை மீறாமல் இருப்பதைக் காட்டுவதாக கண்காணிப்புக் குழுவின் தலைவர் யாழ்ப்பாணத்தில் படையினரிடம் தெரிவித்தார். (01)

## போக்குவரத்...

இதுதொடர்பாக நேற்று அவசரமாகக் கூடி ஆராய்ந்த பாதுகாப்புப் படை தளபதிகள் -

போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் வகை யில் விடுதலைப் புலிகள் பயணத்தை மேற்கொண்டால் அவர்களின் படகுகளை தாக்கியழிப்பதென முடிவெடுத்தனர்.

இந்த முடிவு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாக புலிகளுக்கும் அறிவிக்கப்படும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## ரவிராஜ் எம்.பி.மீது...

திருகோணமலை - கண்டி வீதியில் நகரிலிருந்து 3 கிலோமீற்றருக்கப்பால் உள்ள அபயபுரம் பகுதியில் சிங்களக்காடையர்கள் அவர் பயணித்த வாகனத்தை இடைநிறுத்தி கற்கள் மற்றும் பொல்லுகளால் தாக்கினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்பதை அடையாளம் கண்டுகொண்ட கும்பல் அவரைத் தாக்கி கொலை செய்யவும் முயற்சி செய்தது.

இந்த நிலையில், அவரது மெய்ப்பாதுகாவலர் சாதுர்யமாக வாகனத்தை அவ்விடத்திலிருந்து வேகமாக நகர்த்திச் செல்லமுற்பட்ட வேளையில்- வாகனத்தின் கண்ணாடிகள் மற்றும் ஏனைய பகுதிகளையும் அடித்து பலத்த சேதமாக்கினர். நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜுக்கும் கையில் காயம் ஏற்பட்டது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இராணுவத்தினர் இருந்த போதும் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரை பாதுகாக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எனினும், சம்பவத்தை அறிந்து அங்கு விரைந்த பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தும் கண்ணீர் புகை குண்டுகளை பிரயோகத்தும் கூட்டத்தை கலைத்தனர்.

இதன் பின்னர் ரவிராஜ் கந்தளாய் பொலிஸ் நிலையத்துக்கு சென்று முறைப்பாடு செய்து விட்டு கொழும்பு சென்றார்.

இதேவேளை, அபயபுரம் பகுதியில் தொடர்ந்தும் வீதியால் பயணித்த தமிழர்கள் பலர் சிங்கள காடையர் கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகினர்.

இதனால், நேற்று மாலை முதல் நகரம் வெறிச்சோடிக்காணப்பட்டது. (10)(4)

## பேச்சை...

பேச்சுக்களை ஒத்திவைக்குமாறு விடுதலைப் புலிகள் கோரியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்திருந்தன.

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் - நோர்வே பிரதிநிதிகள் ஊடாக கடந்த 8 ஆம் திகதி இந்தக் கோரிக்கையை விடுத்திருந்ததாக அரச உயர் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

திருமலையில் தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரனின் படுகொலை உட்பட பல்வேறு போர் நிறுத்த மீறல் சம்பவங்களால் பேச்சுக்களை ஒத்திவைக்குமாறு விடுதலைப் புலிகள் கேட்டிருந்ததாகவும் -

திருமலையில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலை தணியும் வரை பேச்சுக்களை மேற்கொள்ளவேண்டாமென அவர்கள் கூறியிருந்ததாகவும் அந்தச் செய்தி தெரிவித்தது.

## மாமனிதர் விக்னேஸ்...

இற்கு ஆரம்பமான இரங்கல் கூட்டத்தில் பேரவையின் உப தலைவர் ஜோ.ஜெரோம், செயலாளரும் திருகோணமலை நகரசபைக்கு புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நகர முதல்வருமான ச.கௌரிமுகுந் தன், மகளிர் பேரவைத் தலைவி திருமதி கண்மணி வடிவேல் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயானந்தமூர்த்தி, அரியநேந்திரன், துரைரட்ணசிங்கம், சிவாஜிலிங்கம், ரவிராஜ் ஆகியோரும் இரங்கல் உரையாற்றினர்.

பகல் 12.30 மணிக்கு நகரசபையில் இருந்து வாகனப் பேரணியில் எடுத்துச்செல்லப்பட்ட புகழுடல் தாங்கிய பேழை - அஞ்சலி நிலைய வீதி, மின்சாரநிலைய வீதி, திருஞானசம்பந்தர் வீதி, மடத்தடிச் சந்தி ஊடாகச் திருகோணமலை - கண்டி வீதியை அடைந்து அங்கிருந்து லவ்லேன், 3 ஆம் கட்டைச் சந்தி, செல்வநாயகபுரம் கதிர்காமத்தம்பி வீதி ஊடாக அன்புவழிபுரம் கிராமத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது.

சிறுவர்கள், பெண்கள் உட்பட சுமார் 5 ஆயிரம் பேர் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது 3 மணிநேரம் இடம்பெற்ற இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஊர்வலத்தில் பங்கேற்றிருந்தனர்.

ஊர்வலம் சென்ற பாதையின் இருமருங்கிலும் பொதுமக்கள் அணிவகுத்துநின்று மலரஞ்சலி செலுத்தினர். அத்துடன் பாதை முழு வதும் வாழை, தோரணம், கறுப்புக் கொடி மஞ்சள் - சிவப்புக் கொடிகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மாலை 3.45 மணிக்கு அன்புவழிபுரத்துக்கு கொண்டுவரப்பட்ட புகழுடல் - இறுதிக்கிரியைகளை அடுத்து அன்வழிபுரம் கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு ச.கௌரி முகுந்தன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

அஞ்சலிக்கூட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அன்புவழிபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்ட புகழுடல் மாலை 5.30 மணியளவில் தீயுடன் சங்கமமானது.

இதேவேளை - நேற்றுக்காலை முதல் நகரின் சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருந்ததுடன், போக்குவரத்து நடவடிக்கைகளும் முற்றாகச் செயலிழந்திருந்தன.

காலை 11 மணியளவில் நகர சபை மண்டபத்துக்கு வருகைதந்த திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவர் - மாமனிதர் விக்னேஸ்வரனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் - அன்னாரின் மனைவி மற்றும் பிள்ளைகள் மூவருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தனர்.

நகரின் முக்கிய வீதிகள், சந்திகளில் பெருமளவான பொலிஸார் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (04, 10)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.04.2006 அன்று பொன்னுத்துறை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.